Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-ssskr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 11 (09.09.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 340





தேசியத் தலைவர் பிரபாகரனிடமிருந்து - தமிழீழ வலைப்பந்தாட்ட அணித் தலைவி நினைவுக் கேடயத்தை பெற்றுக்கொள்வதை முதற்படத்திலும், வலைப்பந்தாட்ட அணியினர், பயிற்றுவிப்பாளர் மற்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் தலைவருடன் எடுத்துக்கொண்ட படத்தினை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு

# தேசியத் தலைவர் பிரபா பாராட்டு!

(கிளிநொச்சி)

**சாதிக்கக்கூடிய திறமையிருந்தும் நாம் ஊக்குவிக்கப்படவில்லை என்பதையே, உங்களுடைய சுற்றுப் பயணப் போட்டிகளின் வெற்றிகள் உலகுக்கு எடுத்துரைத்துள்ளது என, தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழீழ வலைப்பந்தாட்ட அணி வீரர்களுக்கான பாராட்டு விழாவில் தெரிவித்தார்.**

நேற்று காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் ம.பத்மநாதன், செயலாளர் அ.அன்ரன் அன்பழகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த அணியின் முகாமையாளர் இ.றொகான் இராஜசிங்கம், இணைப்பாளர் இன்பன் ஆகியோர் உட்பட அணிவீரர்களும் கலந்துகொண்டனர்.

இவர்களைப் பாராட்டி நிகழ்த்தப்பட்ட உரையில் - தலைவர் பிரபாகரன், சின்னஞ்சிறிய தேசமான எம்மை - உலகம் திரும்பிப்பார்க்க வைக்க, எமது விளையாட்டுத்துறை மேலும் வளரவேணடும் எனவும் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல, படிப்பிலும் அணிவீராங்கனைகள் காட்டிய திறமையையும் பாராட் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் சிப்பாய் தற்கொலை

(தென்மராட்சி)

முகமாலை முன்னரங்க சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த இளம் இராணுவச் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - நுவரெலியா கிளிகத்தரவைச் சேர்ந்த இந்திக புஸ்பகுமாரகே கொடித்துவக்கு (வயது 18) (12 ஆம் பக்கம் பார்க்க)

## யுவதிகளுடன் சேஷ்டை புரிந்த இளைஞர்கள் மன்னிப்பு கோரினர்

(யாழ்ப்பாணம்)

யுவதிகளுடன் சேஷ்டை புரிந்த இரு இளைஞர்கள் - பொலிஸார் முன்னிலையில் மன்னிப்புகோரினர். இந்தச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் - குறித்த யுவதிகளுடன் தினமும் சேஷ்டை புரிந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை, தனியார் கல்வி நிறுவனத்திற்கு சென்றுவரும்போது மேற்படி இளைஞர்கள் - யுவதிகளிடம் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்ததாகவும், காதலிக்கும்படி பலவந்தப்படுத்தியதாகவும் தெரிவித்து, இந்த யுவதிகள் கடந்தவாரம் பொலிஸில் முறைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ பவுஸர் மோதியதில் பாடசாலை மாணவி படுகாயம்

இராணுவத்தினருக்குச் சொந்தமான பவுஸர் மோதியதில் - படுகாயமடைந்த பாடசாலை மாணவி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கண்டி வீதி மாம்பழம் சந்திக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், சென்.சாள்ஸ் மகா வித்தியாலய மாணவியே தலையிலும், காலிலும் படுகாயமடைந்தார். கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போதே இச்சம்பவம் இடம்பெற்றது. பெற்றோரை இழந்த மேற்படி மாணவி உறவினரின் பாதுகாப்பிலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது.

## செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா இன்று

வரலாற்று சிறப்புமிக்க தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து 8.30 மணிக்கு முருகப்பெருமான் தேரேறிவருவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு-தேனகம் விடுதியில்

# புலிகளின் தளபதிகளுடன் நோர்வே தூதுவர் பேச்சு!



இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

அவர் விடுதலைப் புலிகளின் தளபதிகள் உட்பட பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்தினார்.

நேற்றிரவு விடுதலைப் புலிகளின் தேனகம் விடுதியில் நோர்வேத் தூதுவருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. விடுதலைப் புலிகள் தரப்பில் கிழக்குப் பிராந்திய தளபதி கேணல் கருணா, சிறப்புத்தளபதி ரமேஷ், இராணுவத் தளபதி ராபட் மற்றும் தளபதிகளும் கலந்து கொண்டனர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த கலந்துரையாடலில் கிழக்கு முஸ்லிம்களின் விடயம், பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்தி அந்த அபிவிருத்தி பணிகளை எவ்வாறு மேற்கொள்வதென ஆராயப்பட்டது.

இதற்கு கிழக்கு முஸ்லிம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நிலைவரம் தொடர்பாக ரணிலுடன் எம்.பிக்கள் ஆராய்வு

கிழக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பாக - தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், வடக்கு - கிழக்கிற்கான, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் முக்கிய கலந்துரையாடலை நடத்தினர்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 0136.291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# கச்சாய் கடற்பிரதேசத்தில் வைத்து மீனவர் மீது படையினர் கெடுபிடி!

(ஆழியவளை)

கொடிகாமம் கச்சாய் கடற்பிர தேசத்தில் மீன்பிடிக்கச்செல்லும் கடற்தொழிலாளர்கள் படையினரின் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் தொழிலுக்குச் செல்லும் போது, உணவு எடுத்துச்செல்லக் கூடாது என புதிய நெருக்குதலை படையினர் விதித்துள்ளனர்.

நேரக்கட்டுப்பாடு காரணமாகவும், இந்த மீனவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணிவரையும், மாலை 3 மணிமுதல் மாலை 6 மணி வரையுமே தொழிலுக்குச் செல்ல படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் படகுளில் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியான இந்த நெருக்குதல்கள் காரணமாக தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அரச அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் முறையிட்டும் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என அந்தப்பிரதேச கடற்தொழிலாளர்கள் கவலைகொண்டுள்ளனர். (122)

# எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 'பாலவிகாஷ்' சிறுவர் நிகழ்வு

(நெடுந்தீவு)

ஸ்ரீசத்திய சாயி சேவை நிலையங்களின் வடபிராந்திய இணைப்புக் குழுவினரால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும், பாலவிகாஷ் சிறுவர் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 2 மணிவரை யாழ்ப்பாணம் சத்தியசாயி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பாலவிகாஷ் சிறார்களின் நிகழ்ச்சிகளும், 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரிவு I,II பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் அனைத்து பாலவிகாஷ் சிறார்களையும் பெற்றோர்களையும், ஆர்வமுள்ள அனைவரையும் வடபிராந்திய பாலவிகாஷ் அமைப்பினர் அழைத்துள்ளனர். (113)

# சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றோர்கள்



யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கந்தசாமி , யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்கினராசா முன்னிலையில் - சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கடந்த 35 வருடங்களாக இலங்கையில் பல பாகங்களிலும் ஓர் எழுதுவினைஞராகக் கடமையாற்றியவர்.



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமேனி நடராஜா, யாழ். மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஓய்வுபெற்ற ஆசிரியர். அத்துடன் சமூகப் பணிகளில் இவருக்கு அதிக ஈடுபாடு உண்டு.



சாவகச்சேரி சரசாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவசங்கரநாதன் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிபதி பா. சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் முன்னாள் பத்திரிகையாளரும் ஆவார்.



நாவாந்துறை தெற்கு, கண்ணபுரத்தைச் சேர்ந்த வேலன சின்னத்தம்பி, சமாதான நீதிவானாக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்கினராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் பல சமூகப் பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்.




## சாட்டி மாதா திருவிழா

சாட்டி சிந்தாத்திரை மாதா திருவிழா திருப்பலி, யாழ்.ஆயர் தலைமையில் 20.09.2003 காலை 8.30 மணிக்கு நடைபெறும். இத் திருவிழாவை முன்னிட்டு கடைகளுக்கான கேள்வி கூறல் 13.09.2003 காலை 9.00 மணிக்கு இடம்பெறும்.

(478) யாத்திரைத் தல பரிபாலகர்.

## யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - வரைவுள்ளது

## அனுபவமுள்ள துறைசார்ந்த பணியாளர் தேவை

இரும்பு மற்றும் கட்டடப் பொருள் வாணிபத்தில் முன்னணி வகிக்கும் கொழும்பிலுள்ள MACBERTAN LIMITED நிறுவனத்தின் முகவராகவுள்ள எமது சமாசத்திற்குத் தொழில்நுட்பம் மற்றும் விற்பனை ஆகிய துறைகளில் இந் நிறுவனத்தில் இருவார பயிற்சி பெறுவதற்காக பயிலுநர்கள் - ஆண்கள் இருவர் வேண்டப்படுகின்றனர். பயிற்சி முடிந்ததும் வேலைக்கான கால எல்லையும் சம்பளமும் பேசித் தீர்மானிக்கப்படும்.

க.பொ.த. (சாதாரண) தர பரீட்சையில் (தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் விசேட சித்தி) சித்தியடைந்திருப்பதுடன் தமிழ், ஆங்கில மொழிகளில் சரளமாகப் உரையாடக்கூடியவராயும் இருத்தல் வேண்டும். வயதெல்லை 25 - 50 வரை.

ப.நோ.கூ. சங்கங்களின் இத்துறை சார்ந்த பணியாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும். கூட்டுறவு பயிற்சி பெற்றிருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பத்துடன் கல்வித் தகைமை மற்றும் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளையும் இணைத்து 15.09.2003 ஆம் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
யா.மா.வி.நு.கூ.ச.சமாசம்,
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-1477)


## ஆண்டுநிறைவு விழாவும் பாரதி விழாவும்

இருபாலை பாரதி கலாமண்டபத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவும் பாரதி விழாவும் நாளைமறுதினம் பிற்கல் 3.30 மணிக்கு கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தாயகம் - கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

'பண்பாட்டின் வேராக பாரதி' என்ற தலைப்பில் - தமிழ்துறைத் தலைவர் அ.சண்முகதாஸ், விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, புதியபூமி ஆசிரியர் சி.கா. செந்திவேல் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

தொடர்ந்து பண்பாடு உயர்ந்திடப் பாடு என்ற தலைப்பில் கவியரங்கம் மற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## செஞ்சிலுவைச்சங்க கிளைக்குழு கூட்டம் ஒத்திவைப்பு

(ஆழியவளை)

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவிருந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் எஸ்.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்தக்கூட்டம் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராஜகோபுர திருப்பணிக்கு இந்தியாவிலிருந்து சிற்பிவருகை

(ஆனைக்கோட்டை)

மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலில் ராஜகோபுர திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத்திருப்பணி வேலைகளைச் செய்வதற்கு இந்தியாவின் மாமல்லபுரத்தைச் சேர்ந்த ஞானமூர்த்தி சபரியாரின் சிற்பி வருகை தந்துள்ளார். இப்பொழுது திருப்பணி வேலைகள் நடைபெற்றுவருகிறது. (46)

## சாட்டி மாதா திருவிழா

சாட்டி புனித சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல திருவிழா நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நவநாள் திருப்பலி தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும்.

நற்கருணை விழா 19 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கும் மறுநாள் முதற் திருப்பலி காலை 6 மணிக்கும் திருவிழாத் திருப்பலி காலை 8.30 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.


நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், பிரியங்கா சோப்ரா

தமிழன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

WISH MASTER

(கராட்டிப் படம்)

(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.

மாதவன், சிம்ரன், சினேகா நடித்த

பார்த்தாலே பரவசம்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1424)



நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்

- எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.



## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நடாத்தும்

## பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

உயர்தரப் பிரிவு - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

தலைப்பு - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

கீழ்ப் பிரிவு - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

தலைப்பு - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
- கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003

# கடற்படை பீரங்கிக் கொள்வனவு தொடர்பாக திலக் மாரப்பன விளக்கமளித்து அறிக்கை!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - கொள்வனவு செய்யவிருந்த விரைவுத் தாக்குதல் கலங்களில் பொருத்தும் பீரங்கிகள் தொடர்பான சர்ச்சைகள் கிளம்பத் தொடங்கியுள்ள நிலையில், தமது நிலைப்பாட்டை விளக்கி, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.



இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள்தாவது,

இந்த விரைவுத் தாக்குதல் கலங்களில் பொருத்தும் பீரங்கிகளை வாங்குவது தொடர்பான சர்ச்சைகள்- பத்திரிகைகள் வாயிலாக வந்துள்ளன. நான் 'புஷ்மாஸ்ரர்' என்னும் ஆயுதத்தைக் குறைந்த விலையில் இருக்கக்கூடியதாக, கூடியவிலைக்குக் கொள்வனவு செய்யவுள்ளேன் எனத் தொிவிக்கப்படுகிறது. ஆனால், நான் தனியே ஆயுதத்தை மட்டும் கொள்வனவு செய்யவில்லை. அந்த ஆயுதத்துடன், அதற்குரிய துணைப்பாகங்களான -

தூரப்பார்வைச்சாதனம், கணினி அமைப்புக்கள், குண்டுகளையும் சேர்த்தே கொள்வனவு செய்ய முடிவு செய்துள்ளேன். இவற்றை எனது நேரடிப் பரிசோதனைக்குப்பின், அதனுடைய விபரங்களை நாடாளுமன்றில் ஒப்படைத்துள்ளேன். நான் கொடுத்த விபரங்களைப் பார்வையிட்ட நாடாளுமன்ற உபகுழு அதனை வாங்கலாமென அனுமதி தந்தது. இறுதியில், நாடாளுமன்றம்கூட உபகுழுவின் முடிவையேற்றது.

கடற்படையிடம் தற்போதுள்ள - 23 மி.மீ. பீரங்கிகளுக்குப் பதிலாக 30 மி.மீ. பீரங்கிகளையே நான் மாற்றம் செய்கின்றேன். நான் தொடர்பு கொண்ட கம்பனி- இஸ்ரேல் அரசினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். அவர்களாலேதான் இந்தப் பீரங்கிகளைப் பொருத்த முடியும். இந்தப் பீரங்கிகளுக்குரிய தொழில்நுட்ப உதவிகள், உதிரிப்பாகங்கள் என்பன அந்தக் கம்பனியிலேயே கிடைக்கும்.

இந்த எமது நடவடிக்கைக்குள், வேறு குழுக்கள் தலையீடுகளை மேற்கொள்ளாதபடி, நாம் அந்தக் கம்பனியோடு ஒரு உடன்படிக்கையைச் செய்துள்ளோம்.

இலங்கைக் கடற்படை - 23 மி.மீ பீரங்கிகளுக்குப் பதிலாக 30 மி.மீ. பீரங்கிகளைக் கொள்வனவுசெய்ய வேண்டுமென; கேட்டபோதுதான், இஸ்ரேல் அரசுடன் தொடர்பு கொண்டேன். அப்போது மூன்று வகையான 30 மி.மீ. பீரங்கிகள் இருப்பதாகவும், அதில் ஒன்றுதான் இந்த 'புஷ்மாஸ்ரர்' பீரங்கியெனவும் தெரிவித்தனர்.

'புஷ்மாஸ்ரர்' என்னும் பெயருடன் நாம் இஸ்ரேலிடமிருந்து வாங்கும்போது - 824,000 டொலர் எனவும், சுவிஸிலிருந்து ஒலிகன் என்ற பெயரில் வாங்கும்போது அதன் பெறுமதி 724,000 டொலர் எனவும், ரஷ்யாவிலிருந்து வாங்கும்போது 553,000 டொலர் எனவும் தெரிய வந்தது.

ஆனால், ரஷ்யாவின் பீரங்கி ஏற்கனவே இங்கு நிராகரிக்கப்பட்டது. சுவிஸ் பீரங்கி விலை குறைவானதென இங்கு ஏற்கப்பட்டது. அதேநேரம் 'புஷ்மாஸ்ரர்' பீரங்கியை தயாரிக்கும் இஸ்ரேல் கம்பனி- அதன் விலையை 228,472 டொலராக குறைத்துத்தர முன்வந்தது. இது தனியே பீரங்கிக்கு மட்டுமான விலை. நான் முதலில் குறிப்பிட்ட விலை, அதன் உதிரிப்பாகங்களுககு அல்ல. அந்த உதிரிப்பாகங்களுக்குமான விலை முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல- அதேவிலைதான்.

இவ்வாறான தவறான கருத்துக்களால் பொதுமக்களிடையே ஏற்பட்ட குழப்பங்களை நிவர்த்தி செய்யவே- நான் இந்த அறிக்கையினை வெளியிடவேண்டியுள்ளது என, இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# இந்திய கடற்படைத் தளபதியின் இலங்கை விஜயம் திடீர் ரத்து!

இந்தியக் கடற்படைத் தளபதி மாதவேந்திரசிங்கின் இலங்கை விஜயம் திடீரென பிற்போடப்பட்டுள்ளதாக, இலங்கைக்கான இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை - இந்திய கடற்படைகளின் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியப்படையின் உயரதிகாரிகளினால் வழங்கப்பட்ட பயிற்சிகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக - நேற்று இந்தியக் கடற்படைத் தளபதி இலங்கைவர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இந்தியக் கடற்படைத் தளபதியின் இலங்கை விஜயம் திடீரென ரத்துச்செய்யப்பட்டதாகவும், அவரது விஜயம் பிறிதொரு திகதிக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும், இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இலங்கைப் படை அதிகாரிகளுக்குப் பயிற்சிகளை வழங்கிய இந்தியப் பாதுகாப்பு உயரதிகாரிகள் - கடந்த வெள்ளியன்று நாடு திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

## காத்தான்குடியில் கத்திக்குத்துக்கு இளைஞர் பலி

காத்தான்குடி பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட ஆரையம்பதி இளைஞர் ஒருவர், கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 22 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை யுான கந்தையா சந்திரமோகன், 3 வுருடங்களுக்கு முன்பு ரெலோ இயக்கத்திலிருந்து விலகியவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேசன் தொழில் செய்யும் இவரைக் கொலை செய்தவர்களை இன்னும் இனங்காணவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவரது சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா.சபையின் விசேட அமர்வில் கலந்துகொள்ள ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கோபி அனான் அழைப்பு

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அமர்வில், ஜனாதிபதியைக் கலந்துகொள்ளுமாறு ஐ.நா.செயலாளர் நாயகமே அழைப்புவிடுத்துள்ளார். இவ்வாறு, ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட செயலமர்வுக்கான அழைப்பு, இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிரந்தரப் பிரதிநிதி மூலம் ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த அழைப்பு ஜனாதிபதி செயலகத்திற்குக் கிடைக்கவில்லை. இதனால், பதில் கடிதத்தையும் அனுப்பமுடியாமல் போய்விட்டது.

இரண்டாவது கடிதமும் அனுப்பப்பட்டும், காலதாமதத்தின் பின்னரே, ஜனாதிபதி செயலகத்திற்குக் கிடைத்துள்ளது. இதற்கான காரணங்கள் எவையென இதுவரை புரியவில்லை. ஜனாதிபதி இந்த அழைப்பினை ஏற்று, உரையாற்றுவதற்கான நேரத்தையும் கேட்டுப் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஆனால், உரையாற்றுவோர் பெயர்ப்பட்டியலில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவின் பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஜனாதிபதிக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் விசேட செயலமர்வில் ஜனாதிபதி கலந்துகொள்வார் என வெளியான பத்திரிகைச் செய்திக்கு பதில் அளிக்கும் வகையிலேயே, இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டமைப்பை வலியுறுத்தும் சந்திரிகா

(கொழும்பு)

நேர்மையான அரசியல் தலைவர்கள் இணைந்து, தேசியக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான தேவை தற்பொழுது மேலெழுந்துள்ளதாக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக பரந்தளவிலான தேசியக் கூட்டு ஏற்பாடு வளரவேண்டும் என்றும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றிலே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

# ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டு; தோல்வி ஆச்சரியம் தரவில்லை!

## என்கிறார் பட்டி வீரக்கோன்

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் கூட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது பற்றி ஆச்சரியப்படவில்லை என்று, லங்கா சமசமாஜக்கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு மக்கள் விடுதலை முன்னணி ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவில்லை. இதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை முறிவடையும் என்பதைத்தான் முன்னரே அறிந்திருந்ததாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனாதிபதி தொடர்பு கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்தார்.

## குகனெழிலைத் தேரினிலே பார்



தொண்டைமா னாற்றோரம் செல்வச்சந் நிதித்தலத்தில்
கந்தனுறை கின்றானென் றறி!
முழுமௌனம் பூசையிலே மனமுவந்து அருள்சுரக்கும்
குகனெழிலைத் தேரினிலே பார்!
செல்வச் சந்நிதியின் அருட்செல்வன் முருகையன்
நெடுந்தேரில் வருமழகைப் பாடு!
துன்பத்தால் துடிப்போரின் துயரோட்ட மால்மருகன்
அன்பருளத் தேரில்வரப் பார்!
வகைவகையாய்க் காவடிகள் ஆடிவரப் பொற்தேரில்
வள்ளல்குகன் வருமழகைப் பாடு!
பறவைக் காவடியோ டன்பர்பறந் தாடிவரக்
குறவேலன் தேரில்வரப் பாடு!
அடியவரின் குறைபோக்கி வளம்சேர்க்க மனத்தேரில்
அருள்வேலன் வருமெழிலைப் பாடு!
குறவள்ளி குஞ்சரியாள் மருங்கசைய மின்தேரில்
குமரனுலா வருமழகைப் பாடு!
அலையலையா யன்பர்வரக் கண்டுகடல் ஆர்த்தெழவே
அழகன்குகன் தேரில்வரப் பாடு!
சந்நிதிவாழ் முருகையா இந்நிலையெமக் கெதற்கையா?
சண்முகனே! தே (நே) ரில்வந்து ஆள்!
வளமான வாழ்விழந்து வாழ்விடங் களுமிழந்தோம்!
வடிவேலா தேரில் வந்து பார்!
எதையெதையோ நாமிழந்தோம் ஏதுமில்லை இழப்பதற்கு!
எம் நிலையைத் தே(நே) ரில்வந்து பார்!
உரிமைக்காய் உழைப்போர்க்குத் தோள்கொடுக்கும்
கதிர்வேலா!
உருண்டுவரும் தேரில்வந்து அருள்!
வேண்டுவார் வேண்டுவன வேண்டுபவர்க் கருள்வேலா!
வேண்டுகிறோம் தே (நே) ரில்வந்து ஆள்!
எம் தேவை நீயறிவாய் சந்நிதிவளர் சண்முகனே!
எமக்கருள்வாய் தேரில்உலா வந்தே!

"வயலூர் முருகன்"

## "தத்துவனே தமிழழகே நீயுமோடி வா"

வண்ண மயிலேறி விளையாடிடவே வா
வள்ளிதெய்வ யானையோடு கூடிடவே வா
விண்ணதிரும் முரசொலியைக் கேட்டிடவே வா
வீரத்தமிழ் மறவரையும் கண்டிடவே வா
எண்ணிலாத பக்தர்களைப் பார்த்திடவே வா
ஏற்றபடி அவர் குறைகள் போக்கிடவே வா
தொண்டைமானாறு செல்வச் சந்நிதிக்கே வா
தத்துவனே தமிழழகே நீயுமோடி வா!

- அரியாலையூர் சி.சிவதாசன்.

## முருகனே முத்து கடம்பா

உருகா உளமும் உனது பொற் பாதமனதைத்
தருவா யெனி நின்றமுதிடச் சித்திக்குமே
வருவாய் முருகா வடிவேலனேயுன்
அருகே அடியிலே அமர்பேர ருளுதியே

சுராதம துயரம் தொலைவா திடவேலே
அரனார் மகனே எறிய அழிவுற்றார்
கரமி நாளும் அபயம் என நிற்க
வரமே புரிந்தாயருளுக பாத மெனக்கே.

வ.சிவாஜி.கரவெட்டி.

# நெடுந்தீவிலுள்ள முகாம்கள் அகற்றப்பட்டால் குரங்குப்பாஞ்சான் முகாம் அகற்றப்படலாம்!

## நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் தெரிவிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாம்கள் அகற்றப்பட்டால், குரங்குப்பாஞ்சானில் நாம் அமைத்த முகாம் அகற்றுவது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் வாய்ப்புக்கள் உண்டு. இவ்வாறு தெரிவித்தார் நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன்.

கடந்தவாரம் நெடுந்தீவில் இடம் பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு, உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், முதன்முதலாக நாம் நெடுந்தீவுக்கு அரசியற்பணியினை ஆரம்பிக்க வந்தபோது, இல்லாத மூன்று முகாம்களைத் தற்போது பார்க்கக் கூடியதாகவுள்ளது. கடற்படை, பொலிஸ், ஜே.வி.பியுடன் கூட்டமைத்துத் தமிழீழத்துக்கு எதிராகச் செயற்பட இருக்கும் சக்தியான ஈ.பி. டி.பி. குழுவினர் மூன்று முனைகளில் முகாமிட்டுள்ளனர். இவர்கள் மக்களின் எழுச்சியினையும், விடுதலையின்பால் மக்கள் கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையையும் கண்டு, பொறுக்கமுடியாத சக்திகளால் மக்களின் உணர்வலைகளை ஒடுக்கவேண்டும் என்ற நோக்கில் தான், இங்கு கொண்டுவரப்பட்டார்கள். அதற்கு மாறாக மக்கள் எழுச்சி கொண்டே இன்று எம்மை ஆதரித்து வருகிறார்கள்.

குரங்குப்பாஞ்சான் பகுதி முகாமை நாம் அகற்றவேண்டும் எனக் கோரிக்கைகள் பலமாக எழுகிறது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், எமது தாயகப் பகுதியான நெடுந்தீவில் முகாம் அமைக்க இராணுவத்தால் முடியுமானால், எமது தாயக பூமியில் நாம் ஏன் முகாம் அமைக்க முடியாது. நெடுந்தீவு முகாம்கள் அகற்றப்பட்டால், குரங்குப்பாஞ்சான் முகாம் அகற்றல் தொடர்பாகப் பரிசீலிக்கப்படும்.

இதனால்தான், நெடுந்தீவில் கடற்படையும், பொலிஸாரும் இருக்கும்வரை குரங்குப்பாஞ்சானில எமது முகாம் இருக்கும் என, எமது தலைவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

மக்களுக்கு - கடற்படையும், பொலிஸாரும் நெருக்கடிகளையும், அவலங்களையும் கொடுக்கலாம். ஆனால், மக்கள் அடிபணியாது இருப்பதற்கு - கடற்படை, பொலிஸ், தேசத்துரோகிகள் போன்றோரை வெளியேறவேண்டும் என்று, சுமார் 81 நாட்கள் போராட்டம் நடாத்தினர்கள். இதைக்கண்டு உலகமே வியந்து நின்றது. இந்தப் போராட்ட நிகழ்வினை நேரடியாகவே நிதர்சனம் போராளிகள் காட்சிப்படுத்தியுள்ளனர். அதனைத் தொகுத்து, அதனு டாக நெடுந்தீவு மக்களது உணர்வுகளை- உலகம் பார்க்ககூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாங்கள் உலக நாடுகளுக்கு மேற்கொண்ட இசைப் பயணத்தின் போது, அங்குள்ள தாயகம் வாழ் மக்கள் - ஒன்றை மட்டும் எம்மிடம் சொல்லியனுப்பினார்கள். "தலைவரிடம் போய்ச் சொல்லுங்கள் - தலைவர் வாழ்கின்ற காலத்தில்தான் எமக்கு விடுதலை கிடைக்குமென" இந்த வகையிலே, அந்த மக்கள் விடுதலையின் மேல் வைத்துள்ள பற்று போன்று, போராட்டம் நடக்கும் பிரதேசங்களிலே இருக்கும் மக்களாகிய நீங்களும், விடுதலையின்பால் பற்றுதிகொள்ள வேண்டும்.

இடைக்கால நிர்வாகம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆனாலும், நாம் படைபலத்திலே குறைந்தவர்களாக, சிதைந்தவர்களாக இருப்போமாக இருந்தால், எமது விடுதலை இயக்கம் அழிக்கப்படும், எமது இனம் நசுக்கப்படும். எனவே, போராட்டத்தின்பால் மக்கள் இணைய வேண்டும். எமது படைப்பலம் நவீன மயமாக வேண்டும். கல்வியில் உயர்ந்தவர்கள், கணினியில் தேர்ச்சி பெற்றவர்கள் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும். போராட்டத்தில் இணைவது சாவதற்காக மட்டும் இல்லை. ஏன் இந்த சமாதான காலத்தில் நெடுந்தீவில் மருத்துவப் பணியாற்றுவதும், ஒரு போராளிதான் என்பதை நீங்கள் உணரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வீதித் தடையினால் விபத்துகள் அதிகரிப்பு!

மானிப்பாய் வீதியில், ஆறுகால் மடம் - வைத்திலிங்கம் பாடசாலைக்கு முன்பாக, வீதியை மறித்து வாய்க்கால் போன்று வீதித்தடை வெட்டப்பட்டுள்ளது. இந்த வீதித்தடையால், அதிகாலையில் போக்குவரத்தினை மேற்கொண்டோர் விபத்துக்குள்ளானதாகவும், தொடர்ந்து வழமையான போக்குவரத்தினை மேற்கொள்வோர் இதனை அவதானிக்காமையால், வாய்க்காலில் விழுந்து, எழுந்து பெரிய சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தினை மேற்கொள்கின்றனர். இந்த வீதியில் தொடர்ந்து மூன்று விபத்துக்கள் இடம்பெற்றுள்ளது. அதில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த வீதியால் வாகனங்களின் அதிகரித்த வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த வீதித்தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)

# சின்னஞ்சிறு செய்திகள்

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட-இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பத்திரிகையாளருக்கான அவசர கலந்துரையாடல் இன்று மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், பத்திரிகையாளர் பயிற்சி நெறி உட்பட பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால, அனைத்து பத்திரிகையாளர்களையும், துணைவேந்தர் அலுவலகத்திற்கு அருகில் ஒன்று கூடுமாறு வட-இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(நவிண்டில்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை காலை 11 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலர் கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் - சகல திணைக்களங்களையும் சேர்ந்த தலைவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளது. (116)

## செஞ்சிலுவைச் சங்கத்தில் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கைக்கிளை கீழ் குறிப்பிட்டுள்ளவர்களை, உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

திருமதி.அழகேஸ்வரன் மொறின் கிறிஸ்ரினா (நேதாஜி ஒழுங்கை, நல்லூர்), கந்தையா யோகரட்ணம் தனலஷ்மி (39, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தியடி, யாழ்ப்பாணம்.), செல்வராஜா மைதிலி (மே.பா. ஏ.எம்.அல்பிரட் (ஆசிரியர்), டச்சு வீதி, பண்டத்தரிப்பு.), திருமதி வைரமுத்து ராஜேஸ்வரி (ஸ்ரீபவனம், சங்குவேலி, மானிப்பாய்), திருமதி சிவராஜா நாகேஸ்வரி (143/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)

# வன்னிப் பாடசாலைகள் மீளப் புனரமைக்கப்படுகிறது

(கிளிநொச்சி)

வன்னியிலுள்ள சில பாடசாலைகள் மீளப்புனரமைக்கப்பட்டு வருகிறது.

அண்மைக்கால யுத்தத்தினால், வன்னியில் பல பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், தற்போது அந்தப் பாடசாலைகள் கொட்டில்களிலும், மரநிழல்களிலுமே இயங்கிவருகிறது.

ஆனால், தற்போதைய சமாதான சூழ்நிலையில் கனகராயன் குள மத்திய மகா வித்தியாலயம், புளியங்குளம் இந்துக் கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலேயே புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றது.

கடந்த கால யுத்தங்களினால், வன்னிப் பாடசாலைகளின் கட்டடங்கள் உடைந்தாலும், மாணவர்களின் கல்விநிலை தளரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





* முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய சித்திர வடிவமைப்புப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில் அண்மையில் புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஓவிய சிற்பக் கண்காட்சியினை முதலாவது படத்திலும் அதில் பங்கு பற்றிய எட்டு மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் : ஞா.சந்தோஷ்
முகவரி : கில்னர் லேன் யாழ்ப்பாணம்.



முதலாவது அகவையில்

பெயர் : சி.சினேகா
முகவரி : மலையந்தோட்டம், வல்வெட்டித்துறை.



நான்காவது அகவையில்



பெயர் : கெ.நிசாந்தன்
முகவரி : கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

ஒன்பதாவது அகவையில்

பெயர் : த.சபிஸ்ரா
முகவரி : கச்சேரி கிழக்கு, சுண்டிக்குளி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# உதைபந்து ரசிகர்களுக்கு

## உளவியல் மருந்து

தற்போது உதைபந்தாட்டங்களில் பொலிஸார்பாடு திண்டாட்டமாக உள்ளது. ரசிகர்கள் செய்கின்ற அட்டகாசத்துக்குத் தீர்வாக -2004 ஆம் ஆண்டு யூரோ கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின்போது, எவ்வாறு ரசிகர்களைக் கட்டுப்படுத்துவது என்று பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருக கிறது. முதலாவதாக - பொலிஸார் தமது சீருடையைக் களைந்துவிட்டு,



சாதாரண உடையுடன் மக்களுடன் மக்களாக நின்று, சந்தோசமான முறையில் ரசிகர்களுடன் உரையாடி, அவர்களுடன் உளவியல்ரீதியில் பழகுதல்வேண்டும். இதன்மூலம் வன்முறைகளை ஓரளவு குறைக்க முடியும். இப்படியான உளவியல் மருந்து கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளின் போது, ஜப்பான் மற்றும் கொரியா நாடுகளுக்கிடையிலான போட்டியில் பாவிக்கப்பட்டது. ஆனால், இது சில எதிர் விளைவுகளையும் தரும் என்று கூறப்படுகிறது. ஆனால், உதைபந்தாட்டப் போட்டிகளில் ரசிகர்களைக் கட்டுப்படுத்த வேண்டிது தேவையானதுதான்.




# பிரிட்டன் பறவைகளுக்கு

## ஒரு நல்ல செய்தி



பிரிட்டனிலுள்ள பல பிரசித்திபெற்ற பறவைகள் - கடந்த சில வருடங்களாகத் தம்முடைய வாழ்க்கையில் நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. 105 பறவை இனங்களில் கணிக்கப்பட்ட போது, அவற்றில் 29 இனங்கள் முற்றாக அழிவடைந்து காணப்பட்டன. ஆனால், 1994 இல் 52 பறவை இனங்கள் புதிதாக இணைந்துகொண்டன. இதனை எல்லாம் கருத்திற்கொண்டு பறவைகளைப் பாதுகாப்பதில் றோயல் சொசைட்டி ஊக்கமான முறையில் காணப்படுகிறது. 2002 ஆம் ஆண்டளவில் 2136 பறவைகளின் வாழுமிடங்கள் மற்றும் சரணாலயங்கள் எல்லாம் பிரிட்டனில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டபொழுது, அவற்றில் 1,700 இடங்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. ஆனால், வருடா வருடம் புதிய இனங்கள் மட்டும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. வூட்பீஜன், சாவின்ச், பிறக்பேர்ட், றென், றொபின், குறோ, புளுஷெட், கிறேட்டிட், டன்னக், ஸ்வலோ, மக்பை, ஸோஸ் திறஸ், கிறீன்வின்ச், பசன்ட் ஆகிய பறவைகள் பிரிட்டனில் காணப்படுகின்றன. ஆனால் ஸ்டார்லிஸ், ஸ்கைலாக் கவுஸ்பரோ, மற்றும் வில்லோ வார்ட்லர் ஆகிய பறவை இனங்கள் அழிந்துவிட்டன. இவை அழிந்தாலும் மீன்கொத்திகள், மரங்கொத்திகள் ஆகியன சடுதியாகப் பெருகியுள்ளன. ஆனால, தற்போது பிரித்தானிய அரசு பறவைகள் விவகாரத்தில் எடுத்த முடிவு பாராட்டுக்குரியது. இதற்குப் பறவைகள் அரசுக்கு நன்றி கூறவேண்டும்.

# முதுமையில் ஞாபக மறதி




டிமென்சியா (**Dementia**) எனப்படும் முதுமையில் ஏற்படும் நோய், ஒரு மனிதன் ஞாபக சக்தி, சிந்தனை, உள நடத்தைகள் ஆகியவற்றைப் பரந்த அளவில் பாதிக்கின்றது. முழுமையாக இந்த நோயால பாதிக்கப்பட்டவரை மீட்டுவிடமுடியாது. ஓரளவு குணப்படுத்தமுடியும். மூளையின் கலங்களில் ஏற்படும் மாற்றங்கள், மூளைக்குப் போதிய இரத்தம் செல்லாதிருப்பது, மூளையின் நரம்பு, கலங்களில் அதிகளவில் புரதம் சேர்ந்திருப்பதும், மூளையின் முன்பக்கத்தில் அமைந்த மடிப்புக்களில் மாற்றங்கள் உண்டாவதும் இந்த நோயின் முக்கிய காரணிகளாகச் சொல்லப்படுகின்றது.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவரிடம் காணப்படும் அறிகுறிகளை, நோயைத் தீர்ப்பதற்கு முன் தெரிந்து கொள்ளுதல் முக்கியமாகும்.

இந்த நோய் ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு விதமான முறையில் பாதிக்கப்படுகின்றது. தனிமனித ஆளுமையும், ஆரோக்கியநிலை, சமூகநிலை- ஒவ்வொரு மனிதனிடமும் மாறுபட்டு உள்ளதால், நோயின் தன்மையும் ஒவ்வொருவரிடமும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் - குறுகிய காலத்து (**Short term memory**) ஞாபகசத்தியை இழந்து விடுவார்கள். இதுவே நோயின் ஆரம்பநிலையாக அறியப்பட்டுள்ளது. தமது அயல் வீட்டில் வாழ்பவரின் பெயரை சொல்லத் தெரியாமல் இருப்பார். ஆனால், அடுத்த வீட்டில் அவர் வாழ்வது தொடர்பாகத் தெரிந்திருப்பார். சிந்தித்து செயல்படுத்தத் தேவையில்லாத, நாளாந்த கருமங்களைக கூட, இந்த நோயால் பாதிக்கப்பட்டவர் - எந்த ஆடைக்குப் பின் எதை அணிந்துகொள்ள வேண்டும் என்ற ஒழுங் குமுறையை மறந்திருப்பார். உணவு தயாரிக்கும்போது, படிமுறைகளை மறந்துவிடுவார். எல்லோரும் பேசும்போது, சிலவேளைகளில் சரியான சொல்லொன்றை ஞாபக்திற்கு கொண்டுவர முடியாதிருக்கும்.

ஆனால், "டிமென்சியா" நோயால் பாதிக்கப்பட்டவர்கள் - சாதாரண சொற்களையே மறந்து விடுவார்கள். அல்லது பொருத்தமற்ற சொற்களைப் பிரயோகிப்பார்கள். இதன்மூலம் அவரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பவர் கருத்தைப் புரிந்துகொள்ள முடியாதிருப்பார்கள்.

நாம் சில வேளைகளில், வாரத்தின் நாட்களை மறந்துவிடுவோம். அல்லது எங்கே செல்கின்றோம் எனத் தெரியாமல் இருப்போம். ஆனால், "டிமென்சியா" என்னும் நோயால் பாதிப்புற்றவர்கள்- தாம் வாழ்கின்ற தெருவையே மறந்துவிடுவார்கள். அல்லது எங்கிருக்கின்றோம் என்பதைத் தெரியாது இருப்பார்கள். தாம் எங்கிருந்து வந்தோம் என்பது தெரியாமல் இருப்பதால், அவ்விடத்திற்குச் செல்லமுடியாதிருப்பார்கள். இரவிற்கும், பகலுக்கும் வித்தியாசம் தெரியாது காணப்படுவார்கள்.

கடைகளில் - பணத்தைக் கொடுத்துச் சில்லறைக் காசைச் சரியாகப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பார்கள். நாம் எல்லோரும் பொருட்களை இடம்மாறி வைப்போம். ஆனால், இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் - அப்பொருட்களைச் சம்பந்தமில்லாத இடங்களில் வைத்துவிடுவார்கள். எல்லோரும் துக்கம், சந்தோசம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்துவர்கள். ஆனால், இந்நோய் உள்ளவர்கள், சரியான காரணங்கள் எதுவுமின்றி, உணர்ச்சிவசப்பட்டு விடுவார்கள். ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்ளமுடியாதநிலை ஏற்படும்போது - சந்தேகம், எரிச்சல் உணர்வு, மன அழுத்தம் ஆகியவற்றை வெளிப்படுத்துவார்கள். உழைப்பு, வீட்டு வேலைகள் - அநேகமானவர்களுக்கு விரைவில் சோர்வை உண்டாக்கிவிடும். ஆனால், ஞாபகமறதி நோயால் பாதிக்கப்பட்டவர்கள்- ஓரிடத்தில் நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பார்கள். அத்துடன், தொலைக்காட்சிக்கு முன் உட்கார்ந்திருப்பவர்கள் - நீண்டநேரம் நித்திரை கொள்வதும், பொழுது போக்குகளில் அதிகம் நாட்டம் காட்டாது செயல்படுவதும் இந்நோயின் சில அறிகுறிகளாகும்.




# உலகின் மிகச்சிறிய கொள்கலன்



ஏறத்தாழ 2மி.லீ அளவு மட்டுமே கொள்ளக்கூடிய ஒரு கொள்கலனை- நோட்டிங்காம் பல்கலைக்கழகத்தினுடைய இரசாயனவியல் ஆய்வுகூடம் கண்டுபிடித்திருக்கின்றது. ஆனால், இது பில்லியன்கணக்கான அணுக்களைக் கொள்ளக்கூடியது. ஆனால், நனோ பரிசோதனைக் குழாய்கள் ஏறத்தாழ ஒரு சில அணுக்களை மட்டுமே கொள்ளக்கூடியன. இரசாயனவியலாளர்கள் இதனை உற்பத்தி செய்ய, இரண்டு வகையான இரசாயனப் பொருட்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவை மெலானமன் மற்றும் பெரிலன். இந்த இரண்டும் தேன்கூடு போன்று நன்கு பொருந்தக்கூடியது. ஆதலால், மிகவும் இறுக்கமான பிணைப்பை உருவாக்கக்கூடியன. ஆனால், பெரிய மூலக்கூறாகிய பக்கிரிபோல்ஸினைக் கொண்டும் இவற்றைத் தயாரிக்கமுடியும் என்று, இரசாயனவியலாளர்கள் கருதுகின்றார்கள். ஏனெனின், இது ஒரு காபன் பிணைப்பாகும். இதனுடைய கட்டமைப்பு இன்னும் இறுக்கமானது. இதனைவிடச் சிறிய குழாய்கள் வரும்போது அவற்றினைப் பார்ப்பதற்குப் புதிய நுணுக்குக்காட்டிகளும் வரவேண்டும்.

# வெனிஸ் - தங்கச்சிங்க விருதுவிழாவுக்கு தயார்



வருடாவருடம் நடக்கின்ற வெனிஸ் நகர திரைப்பட விருது வழங்கும் விழாவில் - இம்முறை மூன்று திரைப்படங்கள் போட்டி போட்டுக்கொண்டு இருக்கின்றன. பிளைன்ட் சாமுராய், ஏபன் கொரில்லா பாஸ்ட் மற்றும் பாதர்அன்ட் சன் டிரஜடி ஆகிய மூன்று திரைப்படங்களும் ஓட்டப் பந்தயத்திற்குத் தயாராக இருக்கின்றன. இந்தத் திரைப்பட விழாவுக்கு வயது அறுபது. ஆனால், ரசிகர்களின் கருத்துப்படி ஆரம்பத்தில் புலோன் கியர்றோ, றோற்றோ ஆகிய படங்களும் விருதுக்காகப் போட்டிபோட்டன. கடைசியில் ஜப்பானிய, இத்தாலி, ரஷ்ய மொழிப் படங்கள் மட்டுமே ஆயத்தமாக இருக்கின்றன. இந்த மூன்று படங்களும் அற்புதமான படங்கள். ஆனால், விருது யாருக்கு?

# மூன்று பங்கு பழம்

# மூன்று பங்கு மரக்கறி

மூன்றுவகையான பழங்களும், மரக்கறிகளும் இதயநோயைத் தடுக்கக்கூடியன என்று, அண்மையில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். பிரிட்டன் அரசாங்கமும், ஆராய்ச்சியாளர்களும் 5 பங்கு பழங்கள் மற்றும் மரக்கறிகளை ஒவ்வொருநாளும் உண்ணுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த வருடம் 1078 சுகதேகிகளும், 848 இதயநோயாளர்களும் எதென்ஸ பல்கலைக்கழகத்தினரால் ஆராய்ச்சிக்குட்படுத்தப் பட்டபோது, அவர்களில் 43 வீதமான இதயநோயாளிகளும், 67 வீதமான சுகதேகிகளும் தாங்கள் பழங்களும், மரக்கறிகளும் உண்பதாகக் கூறினார்கள். சிலர் மரக்கறிகளையும், பழங்களையும் பெரிதாக நம்புவதாக இல்லை. இருந்த போதிலும், 70 வீதமான மக்கள் தாங்கள் இதயநோயின் தாக்கத்தைப் பழங்கள் மற்றும் மரக்கறிகள் மூலம் குறைத்துக் கொண்டதாகக் கூறுகின்றார்கள். ஐக்கிய இராச்சியத்தினுடைய சுகாதாரத் திணைக்களம் - ஒரு நாளைக்கு 5 பங்கு மரக்கறி மற்றும் பழங்களிலுள்ள சத்து 400 கிராமில் இருப்பதாகக் கூறுகின்றது. உண்மையில், இது இதயநோயாளிகளுக்கு ஒரு இனிப்பான செய்திதான்.



# சதுரங்க தண்டாசனம்

உங்களது கைகளும் கால் விரல்களும் மட்டும் தரையைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். உடலின் மற்றப் பாகங்கள் எக்காரணம் கொண்டும் தரையைத் தொடக்கூடாது. உடலுக்கும் தரைக்கும் இடைவெளி 3 அங்குலம் வித்தியாசம் இருக்கவேண்டும். முதல்நிலையாக இரண்டு நிமிடங்கள் போதுமானது. பின் ஐந்து நிமிடங்கள்.



**நன்மைகள்**

உடலின் நரம்புகளையும், எலும்புகளையும் வலிமை கொள்ளச் செயயும் இந்த ஆசனத்தால், நரம்புகளின் இயற்கை சக்தி மிகவும் வலிமையாகும். தொடர்ந்து செய்துவர உணர்ச்சி நிலை மிக உயர்வாகும். கோபநிலை மிகவும் குறைவடையும். பொறுமை உண்டாகும். இருதயம் தைரியம் பெறும்.

**தருபவர்.மகாநேசன்**

# மூளையும் பசியும்



மூளைக்கும் நாம் விரும்பிச் சாப்பிடுகின்ற உணவுக்கும் ஒரு வகையான தொடர்பு இருப்பதாக லண்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

ஆனால் ரஷ்ய நாட்டு விஞ்ஞானி இவன் பல்லோ மணிச்சத்தம் மூலம் நாய்களுக்குப் பசியைக் கொண்டுவருகின்ற முறையை ஏற்கனவே கண்டறிந்துள்ளார். பொதுவாக மக்களிடையேயும், இப்படியான பழக்கங்கள் காணப்படுகின்றன. மக்கள் ஐஸ்கிறீம் உணவின் மீது அதிக விருப்பம் கொள்வது போன்றன இதற்குரிய சாட்சியாக உள்ளன. உண்மையில் பசி எடுக்கும் பொழுது மனிதன் எல்லாவற்றையும் சாப்படுவதில்லை. அவனுடைய பசியின் விருப்பு உணவு வகைகள் மூளையிலிருந்து கிடைக்கும் கட்டளைகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன. பெருவாரியான தூண்டல்கள் மூளைக்குக் கிடைத்தாலும், அதில் சிலவற்றையே - அது எடுத்துத் துலங்கல்களைக் கொடுக்கின்றது. ஆனால் மூளைக்கு நாங்கள் சில நிபர்ந்தனைகள் மூலம் பயிற்சி கொடுக்கும் பொழுது, அது சில துலங்கல்களைக் காட்டுகின்றது. சில உணவுகளைக் கண்டவுடன் மூளை அந்த உணவினைச் சாப்பிட்டால் கிடைக்கக் கூடிய விளைவுகளை உணர்ந்து கொண்டு, அதனைத் தொடுவதா, விடுவதா என்று தீர்மானிக்கின்றது. அதேபோல ஒரு உணவு கிடைக்குமா, கிடைக்காதா என்பதும் இதற்கு - அது முதலில் பெற்ற அனுபவங்களின் தொகுப்பும் பயன்படுகின்றது. இதற்குரிய உதாரணம் பெரிய விருந்துகளில் நாம் ஐஸ்கிறீமிற்கு ஏங்குவதனைக் கூறலாம். நாம் நல்ல உணவுகளைச் சாப்பிடுவதற்கு மூளைக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

# அழிந்துபோகும் நிலையில் கடல் பறவைகள்



அல்பேற்றொஷ் (ALBATROSS) என அழைக்கப்படும் கடல் பறவைகள் அருகிவருவதாக, இயற்கை வளப்பாதுகாப்பாளர்கள் தெரிவித்துள்ளார்கள். முன்னர் பாதுகாப்பான இனமாகக் கருதிய இந்தப் பறவைகள், தற்போது அழிந்துபோகும் நிலைக்குச் சென்றுள்ளன. மீனவர்கள் கடலில் விரிக்கும் நீண்டதூர வலைகளே, இந்தப் பறவையின் மரணத்துக்குக் காரணம் எனத் தெரிய வந்துள்ளது. இந்தப் பறவையின் 21 வகைகள் தற்போது உலகிலிருந்து இல்லாது போகும் நிலையிலுள்ளன. வருடமொன்றுக்கு 300,000 பறவைகள் கொல்லப்பட்டு வருகின்றன. மீன்களைத் தூண்டிலிலுள்ள இரைகளை விழுங்குவதன் மூலம், தமக்கு உயிராபத்தையும், காயங்களையும் ஏற்படுத்திக் கொள்கின்றன.



எவ்வாறு இந்தக் கடல் பறவைகளுக்கு உயிராபத்து ஏற்படாதவாறு வலைகள் கடலில் விரிக்கலாம், என்பது தொடர்பாகத் தெளிவுபடுத்துவதற்காக மீனவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு, இயற்கை வன பாதுகாப்பாளர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

# திரை விமர்சனம்

## தென்னவன்



அண்மையில் திரைக்கு வந்திருக்கிறது விஜயகாந்தின் "தென்னவன்" திரைப்படம். பல பரபரப்புக்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் வெளியான இந்தப் படம், மொத்தத்தில் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தையே பரிசளித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

எதுவித மாறுதல்களுமின்றித் தனது பழைய பாணியிலேயே அநியாயங்களையும், ஊழல்களையும் தட்டிக்கேட்கும் ஒரு பாத்திரத்திலேயே விஜயகாந் தோன்றுவது- என்னவோ ஏற்றுக்கொள்வதற்கு ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது. பாத்திரத்தின் பெயர்தான் மாறியிருக்கிறதே தவிர, தன்மை மாறவில்லை படத்திற்குப் படம் கதாநாயகிகள்தான் மாறுகிறார்களே தவிர, வேறெதுவுமே மாறுவதாகத் தெரியவில்லை. அதே பழைய காட்சி அமைப்புகளும், பின்னணிகளும்தான் தொடர்ந்தும் காட்டப்படுகிறது. கோடை காலத்திலும் முழுக்கைச் சேட்டுடன் வருகிறார் விஜயகாந். இவை பார்ப்பதற்குச் சலிப்பைத் தருவதாகவே இருக்கிறது.

"தென்னவன்" திரைக்கதை இந்திய முன்னாள் தேர்தல் ஆணையாளர் ரி.என்.சேஷனின் குணாதிசயங்களை மையப்படுத்துவதுபோலவே தெரிகிறது. அவரைப்போலவே இந்தக் கதையிலும் கதாநாயகன் நிறையவே கனவு காண்கின்றார். மிகவும் இறுக்கமான தேர்தல் சட்ட விதிமுறைகளை உருவாக்குகின்றார். ஆனால், அவற்றைத் தமிழ்நாடு முதலமைச்சராக வரும் நாசரோ ஏற்றுக்கொள்வதாக இல்லை. இனிக் கதைசொல்ல வேண்டிய தேவையே இல்லை. இருவருக்கும் இடையிடையே மோதல்தானே. கதையை நகர்த்தக்கூடிய ஒரேயொருவழி என்பது தெரிந்தவிடயமே. இறுதியில், நாசரைச் சிறையில் அடைக்கிறார் விஜயகாந். இந்தக் காட்சியும் சற்றுச் சிந்தித்தால் கேலிக்குரியதாகவே படுகிறது. ஒரு தேர்தல் ஆணையாளரால், முதலமைச்சர் ஒருவரைச் சிறையில் தள்ள முடியுமா என்பதை நம்பமுடியாதுள்ளது.



நாசர் சிறைசெல்ல, இடைக்கால முதலமைச்சராக வரும் ஊர்வசி ஓரளவு நடிக்க முயல்கிறார். நகைச்சுவை கலந்த பாணியிலே அவரது நடிப்புச் செல்வது, ஓரளவிற்கு ரசிக்கக் கூடியதாக இருக்கிறது.

விவேக்கின் நகைச்சுவை - வழமை போலவே அரசு இயந்திரத்தைக் கடிப்பதாகவே அமைகறது. பிரபல ரவுடியாக இருந்து, பின் அரசியல்வாதியாக மாறும் விவேக்கின் நகைச்சுவை பல அரசியல் வாதிகளுக்கு வேப்பங்காயாக இருந்தாலும், ரசிகர்களுககு விருந்தாக இருக்கிறது.

படத்திற்குக் கதாநாயகி தேவை என்பதை நிறைவுசெய்வதற்காகவே கிரணைப் போட்டதாகப்படுகிறது.

படத்தில் முதற்பாதி போகிறபோக்குப் பார்ப்போருக்கு, இறுதிப்பாதியில் பல திகில்களும், பரபரப்புக்களும், சுவாரசியங்களும் உள்ளது என்னும் எதிர்பார்ப்பை உருவாக்கிவிடுகிறது. ஆனால், அந்த எதிர்பார்ப்பைச் சிதைப்பதாகவே கதையை அமைத்து, சப்பைக்கட்டு கட்டிவிட்டார்கள்.

படத்தில் சில காட்சிகள் நம்பமுடியாமலுள்ளது. உதாரணம் - தேர்தல் ஆணையாளரை பிரதமர் பாராட்டுவதும், அதுவும் தமிழில் உரையாற்றுவதையும் குறிப்பிடமுடியும்.

மனோகரனின் வசனங்கள் அதிக பிரசங்கத்தனமானவையாகக் காதைச் செவிடாக்கி விடுவதைப்போலத் தெரிகிறது. நந்தகுமாரின் திரைக்கதையும் இயல்பு மாறி, பயணிப்பதாகவேபடுகிறது. யுவன்சங்கர்ராஜாவின் இசையோ அதைவிட மோசம். காட்சிகள் எங்கோசெல்ல, இசையோ வேறு எங்கோ செல்கிறது.

மொத்தில் சொல்லப்போனால், ஒரு விபரணப்படமாகவே வெளிவந்துள்ள "தென்னவன்" விஜயகாந்தின் எதிர்பார்ப்பை 'ரமணா'போல நிறைவேற்றவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

# ஜப்பான் கொடுக்கும் புதியவகை கையடக்கத் தொலைபேசிகள்



கையடக்கத் தொலைபேசிகள் உற்பத்தியில் உலகத்தில் தனக்கென ஒரு இடத்தை வைத்திருக்கின்ற நாடு ஜப்பான். அதன் தலைநகரம் ரோக்கியோ, ஒரு வேலைப்பளுவான நகரம். அங்கே நாளுக்கு நாள் உற்பத்தி செய்யும் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அளவேயில்லை. ஆரம்பத்தில் மனிததேவைக்குப் பெரிதும் உதவிய இவை, இப்போது வேண்டாமடா சாமி என்று சொல்கின்ற அளவுக்குக் கையடக்கத் தொலைபேசியை மக்கள் வெறுத்திருக்கின்றார்கள். ஏனெனில், தற்போது பாவனையிலுள்ள கையடக்கத் தொலைபேசிகளில் காணப்படுகின்ற நாகரிக வளர்ச்சித் தோற்றப்பாடுகள் மிகவும் குழப்பிவிட்டிருக்கின்றன. இறுதியாகச் சந்தைக்கு வந்த கமராவுடன் கூடிய கையடக்கத் தொலைபேசிகள் சிலவேளைகளில், தீய வழிகளுக்கும் இட்டுச் செல்லவல்லன. ஐந்து வருடங்களுக்கு முன் ஜப்பான் கையடக்கத் தொலைபேசிகளில் புதிய கண்டுபிடிப்பில் பல சிக்கல் நேர்ந்திருந்தாலும், தற்போது அதை எல்லாம் வெற்றிகொண்டு, விதம்விதமான கையடக்கத் தொலைபேசிகளை இறக்கிவிட்டுக் கொண்டிருக்கின்றது. முதன்முறையாக வானிலை அவதானிப்பு மற்றும் வீடியோ வகையறாக்கள் எல்லாம் கையடக்கத் தொலைபேசிகளில் அறிமுகமாகியது. ஜப்பான் நாட்டில்தான் 3G என்ற கையடக்கத் தொலைபேசியில் வீடியோத் திரைமூலம் கூட்டங்களைக் காட்டக்கூடிய வசதி மற்றும் லப்டப் கணினி போன்றன காணப்படுகின்றன. இதனுடைய அதியுச்சவேக வலையமைப்புக் காரணமாகச் சேவைகள் இலகுவாக்கப்பட்டிருக்கின்றன. தற்போது ஜப்பான் நாட்டு மக்களிடம் கமராத் தொலைபேசிப் பைத்தியம் பிடித்துவிட்டிருக்கின்றது. ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் இப்படியான கையடக்கத் தொலைபேசிகளை வாங்குகின்றார்கள். அடுத்ததாக, மணிக்கூட்டில் சிறப்பான கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டுவரும் மிகப்பெரிய திட்டமும் ஜப்பானிடம் உள்ளதாம்.

# புகைத்தல் வேண்டாம்

வருடாவருடம் ஆயிரக்கணக்கான நோயாளிகள் புற்றுநோயாளிகளாக இனங்காணப்படுகின்றார்கள். உண்மையில், இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், நுரையீரல் புற்றுநோய்க்கு முக்கிய காரணம் புகைப்பிடித்தல்தான் என்பது விஞ்ஞானிகளின் வாதம். உலகில் மில்லியன் கணக்கான மக்கள் புகைப்பிடிக்கின்றார்கள். அவர்கள் எல்லோருமே சுவாசப்பைப் புற்றுநோயின் அடிப்படை இயல்புகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்று கூறலாம். இஸ்ரேலிய விஞ்ஞானிகளின் கருத்து - புகைப்பிடிப்பவர்கள், புற்றுநோயின் தாக்கத்தினை அதிகரிக்கின்றார்கள் என்பதாகும் புகையிலையானது இரத்தத்தில் காணப்படுகின்ற கலங்களை மெல்ல மெல்லமாக அழிக்கவல்லது. OGG என்ற ஒருவகையான இரசாயனப்பொருள் எங்களுடைய பழுதடைந்த உடற் கலங்களை மீளமைக்கப் பயன்படுகின்றது. புகைப்பிடிப்பவர்களுக்கு OGGயினுடைய செயற்பாடு மிகவும் மந்தமாகத்தான் நடைபெறுகின்றது. இதன் காரணமாக அவர்களுடைய சுவாசப்பைகள் பழுதடைகின்றன.



புகைப்பிடிப்பவர்கள் எல்லோருக்கும் தெரியும், தாம் செய்வது எமது உயிருக்கு உலைவைக்கும் செயல் எனறு. ஆனாலும், அவர்கள் விடுவதாக இல்லை.

ஆனால், சுவாசப்பைப் புற்றுநோய் கண்டறியப்பட்டு, சில மாதங்களில் நோயாளிகள் இறந்துவிடுவதாக 90 வீதமான சந்தர்ப்பங்கள் உறுதி செய்துள்ளன.



# செல்வச்சந்நிதி ஆலய இரதோற்சவ சிறப்புமலர்



# மொழிக்குத் துணையாகும் முருகாவெனும் நாமங்கள்

'ஆற்றங்கரையில் அமைதி கொண்டிருககும் சூழலில், தொண்டமானாறு செல்வசந்நிதி ஆலயமானது அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் தேர் உற்சவம் இன்றாகும். இந்தத் தேர்த்திருவிழா உற்சவத்தைக் காண, பல்வேறு நாடுகளிலும் இருந்தும பக்தர் வெள்ளம் ஓடிவருகின்றது. இலங்கையின் பல்வேறு பிரதேசஙகளைச் சாந்தவர்களும் - முருகன தேர்மீது உலாவரும் காட்சிகளைக் காண வருகின்றார்கள்.

இறைவன் ஐந்தொழில்களை ஆன்மாக்களுக்காகப் புரிகின்றான் என்று தத்துவ ஞானிகள் கூறுகின்றனர். ஐந்தொழில் குறிக்கும் தத்துவத்தை, அவர்கள் விரிவாக உணர்த்துவதற்காகப் பல்வேறு சாஸ்திர நூல்களை ஆக்கியுள்ளனர்.

ஆன்மாக்கள் மனிதப் பிறப்பு எடுத்ததன நோக்கம் - 'இறைவனை அடைந்து, முத்தியின்பம் பெறும்பொருட்டேயாகும்" என நாவலர் பெருமான் குறிப்பிடுகின்றார். ஆன்மாக்களுக்கு வேண்டிய - தனு, கரண, புவன போகங்களை இறைவன் படைக்கின்றான். அவை மாயையில் ஒடுங்காது, இறைவன் காக்கின்றான். ஆன்மாக்களை - இறைவனை அடையவிடாது தடுக்கும் மலங்களை அழிக்கின்றான். ஆணவமலத்தை மறைத்து, இறைவனைத் தெளிவாகக் காண்பதற்கு, மறைத்தல் தொழிலைச் செய்கின்றான். இவ்வாறான செயற்பாடுகள் மூலமாக, இறைவன் ஆன்மாக்களுக்கு அருளுகின்றான்.

ஆன்மாக்களுக்காக இறைவன் ஐந் தொழில்களையும் புரிகின்ற தன்மையைத் தத்துவஞானிகள் இவ்வாறு விளக்குகின்றார்கள். இறைவனின் ஐந்தொழில் தத்துவத்தை விளக்கும் வகையில், ஆலயங்களில் மகோற்சவங்கள் நடைபெறுவதாக 'சமயவாதிகள்' கூறுகின்றனர்.

ஆலயங்களில் நடைபெறுகின்ற கொடியேற்றம் - படைத்தல் தொழிலையும், வேட்டைத் திருவிழா - காத்தல் தொழிலையும், தேர் உற்சவம் - அழித்தல் தொழிலையும், மௌனோற்சவம் - மறைத்தல் தொழிலையும், தீர்த்தோற்சவம் - அருளல் தொழிலையும். உணர்த்துவதாகச் சமய அறிஞர்கள் கூறுகின்றனர்.



செல்வச்சந்நிதி ஆலயத்தில் இன்று தேரேறி வருகின்ற முருகன் - ஆன்மாக்களில் காணப்படுகின்ற மாயைகளை அழித்து, பக்தர்களுக்கு அருட்பேற்றை வழங்குவான் என்ற நம்பிக்கை எல்லோர் மனங்களிலும் தெரிகிறது. நம்பிக்கைதொழும் அடியவர்களுக்கு நல்லருள் புரிபவன் முருகன் என்பதை அனைவரும் அறிவர். அவ்வாறு அறிந்த காரணத்தால், முருகனிடத்து எல்லோரும் ஓடி வருகின்றார்கள்.

தேரிலே வருகின்ற முருகனின் மென் மலர்ப்பாதங்கள் - விழிக்குத் துணையாகின்றன. பன்னிரண்டு தோள்களும் - முன்பு செய்த பழிக்குத் துணையாகின்றன. வடிவேலும், சிவந்தகோடும் - நாம் செய்த பழிகள் நீகக, அருள் வழங்கத் துணையாகின்றன. நாம் முருகா, முருகா என்று நம்பிக்கையுடன் ஓதுவோம். அது நாம் பேசும் மொழிக்குத் துணையாக அமையட்டும்.

பூ.நகுலன்

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்


தரமான பாண், பணிஸ், கல்பணிஸ் மற்றும் பிஸ்கற் வகைகளுக்கு சிறந்த இடம்

**துவாரகா வெதுப்பகம்**

உரிமையாளர் க.சிவகுருநாதன்
கரணவாய் மத்தி,
கரவெட்டி.
(சி-1460)

அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்,

**சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ்**

தொலைத்தொடர்பு சேவை, டிஜிற்றல் போட்டோ பிரதி சேவை, லெமினேற்றிங் சேவை.
T.P: 021- 226 - 3588. (சி-1473) உடுப்பிட்டி.

மங்களகரமான நிகழ்வுகளை சிறந்த முறையிலும், தரமானதாகவும் படம்பிடித்து, நேர்த்தியான சேவையையும் பெற்றிட நாடவேண்டிய இடம்.

**திரு வீடியோ விஷன்**

கலர் போட்டோ கிராபிக்ஸ்,
மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய், கரவெட்டி.
(சி-1459) T.P: 0777 - 158754, 0777 - 589290, 0776 - 092463.

தேரேறி வரும் செல்வச்சந்நிதியான் நிலைத்த சமாதானத்தையும், சுபீட்சமான வாழ்வையும் அருளவேண்டுகின்றோம்.

என்றும் மக்கள் பணியில்

**உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்**

தலைவர், பணிப்பாளர்,
பணியாளர்கள்.
(சி-1466)

லவ்லி கூல்பார், லவ்லி றெக்கோடிங் சென்ரர், லவ்லி வான் ஆசனப் பதிவகம், லவ்லி வான் சேவீஸ் ஆகியவற்றுக்கு நாடவேண்டிய இடம்.

**லவ்லி சயினீஸ் றெஸ்ரூறண்ட்**

T.P: 021-2263219 பிரதான வீதி,
(சி-1465) நெல்லியடி.

நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.



**வைஷ்ணவி நகைப் பூங்கா**

ஓடர் நகைகள்- குறித்த தவணையில், உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
T.P: 0777 - 248923. (சி-1470) பிரதான வீதி, நெல்லியடி.

செல்வச்சந்நிதியான் அருளால், நமது கலாசாலை மாணவ, மாணவிகள் கல்விச்செல்வம் முதலாக அனைத்துச் செல்வங்களும் பெற்று, நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

**கேம்பிறிஜ் கலாசாலை**

நிர்வாகி - சி.தங்கவேல்
(சி-1463) நவிண்டில்.

உள்நாட்டு, வெளிநாட்டு, தொலைபேசி இணைப்புக்கள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள (சி-1461)

**ஹப்பி (HAPPY) ரெலிக்கொம் சென்ரர்**

உள்நாடு 021-2263357, 070-212876.
வெளிநாடு 0094-21-226-3357, 0094-70-212876.
உரிமையாளர் - த.ஜெகதீஸ்வரன்
மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்.

ஆற்றங்கரை வேலன் அருள் பெற்று உய்வோமாக.
கூட்டுறவுக்கு உந்து சக்தியாக விளங்கும்.

**கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்**

தமது சேவைகளை அறிமுகம் செய்வதில் மகிழ்கிறது.
நுகர்ச்சி சேவையுடன், வாடகை ஒப்பந்த சேவை, சமூக, கல்வி, கலை, கலாசாரச் சேவைகளையும் வழங்குகிறது.
தலைவர், பொதுமுகாமையாளர்,
(சி-1467) பணிப்பாளர், பணியாளர்கள்.

தரம் நாடுவோர், தவறாமல் நாடுமிடம்

**தரன் நகைமாளிகை**

ம.ம.வி. வீதி,
(சி-1462) நெல்லியடி; கரவெட்டி.

நவீன மயமாக்கல் டிஜிற்றல் முறையிலான தொழில் நுட்பத்துடன் கூடிய கணினி முறையிலான படத்தொகுப்புக்கள், கறுப்பு - வெள்ளை கலர் படப்பிடிப்பு, புதிய - பழைய படப்பிரதிகள், தொலைத் தொடர்பு வசதிகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்.

**சுதா வீடியோ அன் ஸ்ரூடியோ**

T.P: 021 - 2263707.
Mobile: 0777- 568530. (சி-1471)
உரிமையாளர்- த.சுதாகர்
வதிரி வீதி, உடுப்பிட்டி.

தரம் மிகுந்த மிதிவண்டிகள் (LUMALA, HERO) மற்றும் உதிரிப்பாகங்கள், காலணிகள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**கௌரி மிதிவண்டி - காலணி வாணிபம்**

ம.ம.வீதியில் அமைந்திருந்த கௌரி வாணிபம், தற்பொழுது பருத்தித்துறை வீதியில், நெல்லியடிச் சந்திக்கருகாமையில் அமைந்துள்ளது.
(சி-1458)



# செல்வச்சந்நிதி ஆலய இரதோற்சவ சிறப்புமலர்



# அன்னதானக் கந்தனுக்கு அரோகரா!



***அந்தமில் அவுணர்தங்கள் அடல் கெட உதித்த செவ்வேள்***
***செந்திலம் பதியினின்று தென்பதி ஏமகூடம்***
***வந்திடும் போதில் வீரவாகு மால் வான வீரர்***
***சந்தி கண்டித் தலத்தே சரவணற் பூசை செய்தார்.***

என்பது செல்வச்சந்நிதி தலபுராணம். திருச்செந்தூரில் இருந்து, தென் திசை நோக்கி சூரசங்காரம்செய்ய, எழுந்த முருகக் கடவுளுக்கு - ஏம கூடம் அமைத்து, வீரவாகு தேவராதி அரி பிரமேந்திராதிகள் வழிபட்ட தலம் இச் செல்வச்சந்நிதி என்பது ஐதீகம்.

ஈழத்திருப்பதியிலே - வடமராட்சியிலே - 'தொண்டமானாறு' எனும் புராதன அழகிய நகருண்டு. கருணாகரத் தொண்டமான் எனும் சிற்றரசனுக்கு உண்டான தொடர்பினால், இப்பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. தொண்டமானாற்றங்கரையில் செல்வச்சந்நிதி முருகன் கோயில்கொண்டு, அருள் பாலித்து வருகின்றான். செல்வச்சந்நிதியை - சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம் என அழைக்கின்ற மரபும் உண்டு.

இயற்கை ஒலிகள் எப்பொழுதும் இசைபரப்ப, ஆற்றங்கரையானாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான் முருகன்.

***வீரவேல் தாரை வேல் விண்ணோர் சிறை மீண்ட***
***தீரவேல் செவ்வே டிருக்கை வேல் - வாரி***
***குளித்த வேல் கொற்ற வேல் சூர்மார்புங் குன்றும்***
***துளைத்த வேல் உண்டே துணை***

எனச் சிறப்பிக்கப்படுகின்ற 'வேல்' தான் சந்நிதியான் மூலஸ்தானத்தில் அமைந்துள்ளது.

மலைக் கடவுளாக வணங்கப்படும் முருகனுக்கு 'வேலன்' என்ற பெயர் உண்டல்லவா. வேலைக் கையிலே வைத்திருப்பதனாலேயே முருகனை 'வேலன்', 'வேலவன்' என அழைத்து வழிபாடு செய்கின்றோம்.

சிகண்டி என்னும் முனிவர் செந்தமிழுணரவேண்டி, திருவேங்கட மலைக்கண் உள்ள செவ்வேட் பெருமானைப் பூசித்தார். செவ்வேட்பெருமான் வெளிப்பட்டு 'நம் மாணாக்கன் அகத்தியனிடம் அறிக' என்று அறிவுறுத்தினார். சிகண்டி - அகத்தியாரிடம் முத்தமிழ் கற்று, அனுகுலன் மகனாகிய சயந்த குமரனுக்காக 'இசை நுணுக்கம்' என்னும் ஓர் நூலைச் செய்தார். அகத்தியர் ஆணைப்படி சிகண்டி கதிர்காம வழிபாட்டிற்குச் செல்லும்போது, யானையொன்று வழிமறித்தது. சீடர்களும், பிறரும் அஞ்சினர். சிகண்டி ஒரு வெற்றிலையை எடுத்து, 'இது வேலாகச் சென்று முருகன் திருவருளால் யானையை வெல்க' என விடுத்தார். வெற்றிலை வேகமாகச் சென்று, தைததது. இறந்த யானையிலிருந்து ஒரு கந்தர்வன் வந்து தோன்றி, என் பெயர் 'ஐராவசு', வியாழன் சாபத்தால் யானையாயினேன். முருகன் திருவருளால் பழைய வடிவடைந்தேன் என்றான். அதுமுதல் முருகன் இலை வேற்கடவுளாயினர். இவ்வரலாறு 'கதிர்காம மான்மியத்துள்' விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இத்தகு சிறப்பு வேலுக்குண்டு. இதுபோல வீரவாகு தேவர் பூசை செய்ததாகக் கூறுப்படும் பூவரசு மரமே இப்போதும் சந்நிதியின் தலவிருட்சமாகவுள்ளது. பூவரசு மரத்தின் இலையின் அமைப்பு வெற்றிலையின் அமைப்பை ஒத்திருக்கிறது. வெற்றிலை, பூவரசம் இலை - வேல்வடிவில் அன்றும், இன்றும், என்றும் வினையறுத்து வாழ்வு தரும் வடிவமாக வேலை நினைவுபடுத்துகின்றது.

வரலாற்றுப் பெருமைகளையும், ஆயிரமாயிரம் அற்புதக் கதைகளையும் இணைத்து விளங்கும் சந்நிதிப் பொருமானின் தேர்விழா இன்று. எல்லோரும் எல்லாத் தேசங்களிலும் இருந்து கூடும் பெருவிழா. 'அன்னதானக் கந்தனுக்கு' அரோகரா என்ற பக்திப் பரவசத்தோடு ஏழை, பங்காளிகள் தேர்த்திருவிழா அமைகின்றது. எல்லா நலன்களையும் நாடித் துதிப்போர்க்கு சந்நிதிக் கந்தன் அருள்வான்.

***கவிமாமணி காரை எம்.பி.அருளானந்தன்.***

வீடியோப் பிரதிகள் மற்றும் VCD கள் வாடகைக்கு விடப்படும்.
சுமன் வீடியோ
உடுப்பிட்டி T.P. 0777-111406 (476)

புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், DSI பாதணிகள், அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள
பிரியங்கா
வல்வெட்டித்துறை வீதி, உடுப்பிட்டி. (471)

தேரேறும் சந்நிதியான் அருள்பாலிக்க பிரார்த்திக்கிறோம்.
சகல வகையான மளிகைப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள
மதுஷன் ஸ்ரோர்ஸ்
சந்தை ஒழுங்கை, உடுப்பிட்டி. T.P. 070 - 213080 (475)

சைக்கிள் உதிரிப்பாகங்கள், இரும்புப் பொருட்கள், மின்சார உபகரணங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள
குருநாதர் ஸ்ரோர்ஸ்
V.V.T. வீதி, உடுப்பிட்டி. (474)

சகல பத்திரிகைகளுக்கும், குளிர்பான வகைகளுக்கும், பலசரக்குப் பொருட்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்.
ரஜினி பீடா ஸ்ரோர்ஸ்
அல்வாய் வீதி, உடுப்பிட்டி (472)

சகலவிதமான தங்க ஆபரணங்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய, ஒரே ஸ்தாபனம்
நியூசன் ஆபரண-மாளிகை
பருத்தித்துறை வீதி, (சி-1468) நெல்லியடி.

எல்லாம் வல்ல செல்வச்சந்நிதியான் எல்லோர்க்கும் அருள்புரிவாராக....
நமது ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம் செய்ய விரும்பும் அனைவரும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
கா.பஞ்சரத்தினம்
நமது ஈழநாடு முகவர், யூனியனடி, உடுப்பிட்டி.
தொலைபேசி: 021 – 2263194
070 – 212332

டிஜிற்றல் பிலிமிங், டிஜிற்றல் அல்பம், நேரடியான CD றெக்கோடிங், கறுப்பு, வெள்ளை வர்ணப் படங்களைக் குறித்த நேரம், குறித்த தவணையில் செய்துதரக்கூடிய ஒரேயொரு நிறுவனம்
நிதுஷா வீடியோ (ஸ்ருடியோ) (சி-1464)
உரிமையாளர்:
திரு.மா.மகேந்திரன், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. T.P. 0777 - 722386

தேரேறும் ஆற்றங்கரையான் நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைக்க அருள் புரிய பிரார்த்திக்கின்றோம்



அனைத்து வகையான பலசரக்குப் பொருட்களுக்கும், பிஸ்கட் வகைகளுக்கும் மற்றும்
தம்ரோ, நில்கமல், கொனெக்ஸ் பிளாஸ்ரிக் கதிரைகள் மற்றும் பிளாஸ்ரிக் தளபாடங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாய் வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்ய
கிருபா விநாயகர் அன் கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்
சகலவிதமான குளிர்பானங்கள், சிற்றுண்டி வகைகளுக்கும்
கிருபா விநாயகர் அன் கேதீஸ்வரன் கூல்பார்
சந்தை வீதி உடுப்பிட்டி. T.P: 0712 370446
உரிமையாளர்: கிருபாகரன், கேதீஸ்வரன்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா*
*அஞ்சும் பகைவர்ப் பெறின்.*

\- திருக்குறள்

## நமது நோக்கு

### கனவுக் குடிசையில் இடம் தேடல்........

இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயங்கள் யாவும் இன்னமும் உத்தேச வரைபுகள் - மற்றும் யோசனைகள் - மாற்று யோசனைகள் என்ற நிலையிலேயே நகர்ந்து கொண்டிருக்கின்றன.

யோசனைகள் - மாற்று யோசனைகள், வரைபுகள், மாற்று வரைபுகள், மீள் வரைபுகள், திருத்தங்கள் என காலத்தை விழுங்கி வரும் இந்த நடவடிக்கைகள், எந்தவகையான இறுதி வடிவத்தைப் பெறும் என்பது குறித்து, எதிர்வுகூறல் எதனையும் இப்போது கூறமுடியாத நிலையே உள்ளது.

இறுதியான முடிவொன்று உறுதியாக, இந்த விடயத்தில் எட்டப்படுமா என்ற கேள்விக்கான விடை இன்னமும் ஒரு ஆச்சரியக்குறியுடன் முடியும் ஒன்றாகவே உள்ளது.

அரசாங்கம் - விடுதலைப் புலிகளிடம் கையளித்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளை உள்ளடக்கிய வரைபு தொடர்பாக, அவர்கள் எந்தவிதமான கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை.

அதனை அங்கீகரித்ததாகவோ அல்லது முற்றாக நிராகரித்துவிட்டதாகவோ, விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து அறிவிப்பு எதுவும் வெளிவரவுமில்லை. மாறாக, பாரிஸில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் அரசியல் மற்றும் சட்ட நிபுணர்கள் ஆகியோரின் ஆய்வு மற்றும் கலந்துரையாடி ஆலோசனைப் பகிர்வினையடுத்து, அவர்களால் உருவாக்கப்பட்ட மாற்றுயோசனை வரைபானது - தலைவர் பிரபாகரனின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் கையளிக்கப்பட்டுள்ளது.

அவரது அங்கீகாரம் கிடைத்ததும், அந்தப் புதிய மாற்று யோசனை வரைபு அரசிடம் கையளிக்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான நிலைப்பாடு, இந்த நிலையில் இன்னமும் "திரிசங்கு சொர்க்க"த்தன்மையுடன் கூடிய உறுதியற்ற போக்கினைக் கொண்டதாகவுள்ளது.

இன்னமும் உறுதிப்படுத்தப்பட்ட இறுதி வடிவத்தைப் பெறாத இந்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான வெற்று யோசனைகளுக்கே, சிறிலங்காவின் சிங்களப் பேரினவாத சக்திகள் காட்டி வரும் எதிர்ப்பும், தெரிவித்துவரும் கண்டனங்களும் 'எந்த விலை கொடுத்தும் சமாதானம்' என்ற அரசின் பிரசாரத்திற்கு எந்த வகையிலும் தடையேற்படுத்தும் தன்மையையே கொண்டதாக உள்ளன.

இந்த எதிர்ப்புகள் இரகசியமான ஒன்றல்ல... மிக மிக வெளிப்படையான செயற்பாடுகளாகவே உள்ளன.

இந்தவகையில், பொதுஜன ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி- சிஹல உறுமய உட்பட அனைத்து சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளும் பெரும்பாலும் ஓரணியில் நிற்பதாகவே உள்ளது.

இந்த "இடைக்கால நிர்வாகம்" என்ற சாதாரணமான தற்காலிக கட்டமைப்பு ஒன்றின் உருவாக்கத்தையே தமிழீழத்திற்கான நுழைவுப் பாதை எனப் பிரசாரம் செய்து, குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காக மூர்க்கத்தனமாக எதிர்க்கும் சமாதான- அமைதி விரோத சக்திகள் ஒரு உறுதியான - நிரந்தரமான- தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடியதான அரசியல் தீர்வொன்றை ஆதரிப்பார்களா என்பது கேள்விக்குறியே...

இதுவே இடைக்கால நிர்வாகத்தின் நிலையாக இருக்கையில், கட்டப்படாத ஒரு குடிசையில் தமக்கும் நுழைய உரிமை உண்டு என, அதைக் கட்டமுயன்றுகொண்டிருப்பவர்களைப் பார்த்துக் கூறும் சில சக்திகளைப்போல் இந்த நடவடிக்கையுடன் எந்த வகையிலும் சம்மந்தப்படாத சிலர் இன்னமும் யோசனை நிலையிலுள்ள நிர்வாகக் கட்டமைப்புக்குள் தமக்கும் இடம் கோரும் அறிக்கைகளை வெளியிடுவதுதான் சிரிப்புக்கிடமான விடயமாகும்.

தற்போது இந்தியவாசியாக இருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின் தலைவரான, இந்தியாவினால் முன்னர் உருவாக்கப்பட்டு, இப்போது செயலற்றுப் போயுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வரான வரதராஜப் பெருமாள் - காலத்தில் பின்னர் திடீரென்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் இடைக்கால நிர்வாகத்தில் சகல கட்சிகளுக்கும் இடம்வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முதல்வராக இந்தியாவின் அனுசரணையுடனும், பாதுகாப்புடனும் பதவியேற்று, அவசர அவசரமாக தமிழீழப் பிரகடனமும் செய்து, இந்தியப் படை வெளியேறும் முன்னரே, தான் தனது கடமைப் பொறுப்பைக் கைவிட்டு ஓடிய வரதராஜப்பெருமாள், இடைக்கால நிர்வாகத்துக்குள் இடங்கோர முற்படுவது வேடிக்கையான விடயமாகும்.

பதவிக் கதிரையைப் பகிர்ந்துகொள்ளவும், அதிகாரத்தில் இடம்பிடிக்கவும் காலம்பார்த்து பறந்து வருவோர், தம்மை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இனங்காட்டவே முயல்கின்றனர் என்பது வெளிப்படை.

'சமாதானத்துக்கான போர' என்ற சந்திரிகாவின் யுத்த வெறித்தத்துவத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டு, தமிழ்மக்களின் பேரவலநிலைக்கு காரணமான இந்த சக்திகளின் பின்னணியில், வேறுபல புற அழுத்தங்களும் இருக்கவே செய்கின்றன. இடைக்கால நிர்வாகம் ஏற்படுமோ?.... இல்லையோ, 'சந்திரனில் வீடுகட்ட இப்போதே பதிவு செய்துவைத்துள்ள பெரும்புள்ளிகள்' சிலரைப் போன்று இத்தகைய ஓர், அந்த சபையில் தமக்கான இருக்கைகளை உரிமையுடன் உறுதிப்படுத்த முனைபவர்களாகவே உள்ளனர்.

இதுவும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படக்கூடிய, அற்ப சொற்ப சாத்தியக் கூறுகளைக் குழப்பும் ஒரு முயற்சி என்றே, அரசியல் நோக்கர்கள் கருதுகின்றார்கள்.

இது "ஏதோ புற்றெடுக்க... ஏதோ குடி" கொண்ட கதையாகிவிடும் என்றே அவர்கள் உணர்கின்றார்கள்.

## நாடும் நடப்பும்




# யாழ்.வர்த்தகருக்கெதிராக பிரசாரம் செய்வதை புத்திஜீவிகள் உடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்!

## யாழ். வணிகர்கழகத் தலைவர் ஜெயசேகரன்

யாழ்ப்பாண வர்த்தகர்களிற்கு எதிராக பிரசாரம் செய்வதைப் புத்திஜீவிகள் நிறுத்திக் கொள்ளவேண்டும். உண்மைநிலை அறியாது, பழிசுமத்துவதைத் தவிர்க்கவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண வணிகக்கழகத் தலைவர் ஜெயசேகரன் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வணிகக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது, அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் அநேகமான பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாகவுள்ளது. முன்னரைவிட தற்போது மலிவான விலைகளிலும் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. ஏ-9 வீதி திறப்பிற்கு முன்னர், கப்பல் மூலமாகப் பொருட்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்தோம். தற்போது தரைவழியாகக் கொண்டுவருவதால், மிகவும் நியாயமான விலையில் பொருட்களை விற்க கூடியதாகவுள்ளது. ஆனால், சிலர் உண்மை நிலைகளை அறியாது, வர்த்தகர்கள் மீது பழி சுமத்துகின்றார்கள். அவர்கள் அவ்வாறான குற்றச்சாட்டுக்களை - ஊடகங்கள் மூலமோ அல்லது வேறு வழிகளிலோ வெளியிட முன்னர், எமமோடு தொடர்பு கொள்வார்களாக இருந்தால், நாம் தெளிவான சரியான விளக்கத்தைக் கொடுக்கமுடியும்.

இன்று சில முக்கிய பொருட்களின் விலை கொழும்பைவிட, யாழ்ப்பாணத்தில் குறைவாக உள்ளது. இதற்குக் காரணம்- நாம் இடைத்தரகர்கள் இன்றி நேரடியாகவே உற்பத்தி நிறுவனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவதுதான்.

ஒரு வர்த்தகரின் நடவடிக்கை காரணமாக, ஒட்டு மொத்த வர்த்தகர் சமூகத்தையும் தவறான கண்கொண்டு பார்ப்பது கவலை தரும் விடயம். பொதுவாக, மருந்துப் பொருட்களுக்கு விடுதலைப் புலிகளால் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனை அறியாத மக்களிடம் வரியைக் காரணங்காட்டி, கூடுதல் விலைக்கு மருந்துகளைச் சில வர்த்தகர்கள் விற்று வருகிறார்கள். இது நிறுத்தப்படவேண்டும்.

தற்போது யாழ்ப்பாணத்தை, அநேகமான கம்பனிகள் குப்பை கொட்டும் சந்தையாக மாற்றிவிட்டன. திறந்த வியாபாரச் சந்தையாக யாழ்பாணம் மாறியுள்ளது. இதனால் தரம் குறைந்த பொருட்களையும், உயர்தரமானது எனக் கூறி விற்றுவிடும் சூழ்நிலை காணப்படுகிறது. இதில் மக்கள் தான் விழிப்பாக இருக்கவேண்டும்.

கண்ட பொருட்களையும் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்வதை நிறுவனங்கள் நிறுத்தவேண்டும். அல்லாதுபோனால், காலப்போக்கில் கடுமையான நடவடிக்கை களை நாம் எடுக்கவேண்டிவரும்.

மக்கள் விலைகள் தொடர்பான விடயங்களாக இருந்தாலும் சரி, வேறு விடயங்களாக இருந்தாலும் சரி எம்மோடு அணுக வேண்டும். நாம் உண்மையான நிலைப்பாட்டை அறிந்து, அது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# "பொங்குதமிழ்" நிகழ்வுகளுக்கு ஆதரவளிப்பது துரோகமானது!

## நளின்டி. சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் பிரசார நடவடிக்கைகளில் ஒன்றான பொங்குதமிழ் நிகழ்வுக்கு - இலங்கை இராணுவத்தின் அறிவுறுத்தல்களை மீறி, வவுனியா அரச அதிபர் கே.கணேசும், பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தனாவும் ஆதரவளிப்பதானது - இலங்கையின் வரலாற்றிலேயே மோசமான துரோக நடவடிக்கையாகும் என்று, பேராசிரியர் நளின் டி.சில்வா - தெரிவித்துள்ளார்.

இன்றைய அரசானது, இலங்கையின் வரலாற்றில் மோசமான துரோகத்தனத்தின் இறுதிநிலையை எட்டியுள்ளது எனக் குற்றஞ்சாட்டிய அவர், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் பொங்குதமிழ் நடவடிக்கையானது தேசிய இராணுவத்தின் மனோநிலையைப் பாதிக்கும் செயல்களில் ஒன்றாகும் எனவும், இவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த நடவடிக்கையின் மூலம் விடுதலைப் புலிகள் - அடுத்த யுத்தத்திற்கான தயார்படுத்தலை மேற்கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்த நளின் டி.சில்வா - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின பெயரிலேயே பொதுநிர்வாக அமைச்சர் - இராணுவத்தின் எதிர்ப்புக்களைப் புறக்கணித்துவிட்டு, விடுதலைப் புலிகளின் பொங்குதமிழுக்கு ஆதரவு வழங்குமாறு உத்தரவிட்டதாகத் தெரிவித்தார்.

ஜாதிக சிந்தன பஞ்சாதய என்ற சிங்கள அமைப்பின் இனவாத சிந்தனையாளரான நளின் டி சில்வா, இப்பொழுது பொங்குதமிழ் நிகழ்வை நடத்த ஆதரவு வழங்கும் அரசு- அரசு கட்டுப்பாட்டில் விடுதலைப் புலிகள் முகாம்களை அமைக்க ஆதரவளித்தமை ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் தெரிவித்தார்.

# பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்துவதற்கு ஐ.தே.கட்சி முயற்சி!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி - பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனநிலையைத் திருப்திப்படுத்த, அரசு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

மேற்படி கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாக வெளியான தகவலை அடுத்து, அரசு இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இவர்களது மனநிலையை மாற்றம் செய்வதற்காக - நாட்டின சமாதானம், பொருளாதாரம், நிதித்துறை தொடர்பான விளங்கங்களை அளிப்பதற்காக அமர்வுகளை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் சமாதானம் தொடர்பில், நீதி அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்பீரிஸ் - நிதிச்சேவை பற்றி விளக்கங்களையும், அமைச்சர் லொக்கு பண்டாரவும், பொருளாதார அமைச்சரும் - பொருளாதாரம் பற்றிக் கருத்துரை வழங்கினார்கள்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விபரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.82 | 96.37 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.93 | 153.50 |
| 1 யூரோ | 105.87 | 107.76 |
| 1 சுவிஸ் பிராங் | 68.73 | 68.76 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.61 | 62.83 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.65 | 25.65 |

## அரசியல் நோக்கு... -கோபு

# திருமலையை இந்தியா எடுக்கலாம்
# தமிழர் தமது உரிமைகளை கோரக் கூடாது



"இடைக்கால நிர்வாகம் - விடுதலைப் புலிகளிடம் கொடுக்கப்படக் கூடாது. அவர்கள் விரும்பியபடி, அவரகள் கேட்பதெல்லாம் கொடுக்கப்படக் கூடாது" இது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நிலைப்பாடு.

ஆனால், அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதில், சந்திரிகா அம்மையாருக்கு முரண்பாடு இல்லை. இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டுமென்றே - ஜனாதிபதி சந்திரிகாவும் கூறுகிறார்.

இடைக்கால நிர்வாகசபையில் - தமிழ்மக்கள் மத்தியில் இருக்கும் உதிரி - அமைப்புக்களையும், முஸ்லிம் பிரதிநிதிகளையும், கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், அவர் சொல்கிறார்.

உதிரி அமைப்புக்கள் என்ற 'நால்வர் கூட்டணி' அடிக்கடி அம்மையாருடன் தொடர்புகொண்டு பேசுகிறது. அம்மையாரைச் சந்தித்தும் பேசிக்கொள்கிறது.

வடக்கிலிருந்து - கிழக்கைப் பிரிக்கவேண்டுமென்பது பற்றி, நான் ஆழ்ந்து பரிசீலனை செய்து வருகிறேன் என்று ஜனாதிபதி சந்திரிகா அறிவித்தார். உடனேயே நாங்கள் - இதை ஆதரிக்க மாட்டோம்என்று அறிக்கைவிட்ட 'நால்வர் கூட்டணி' - அம்மையாரைச் சந்தித்துப் பேசியது.

இத்துடன், நால்வர் கூட்டணி திருப்திப்பட்டுக் கொண்டது. ஜனாதிபதியால், வடக்கிலிருந்து - கிழக்கைப் பிரித்துவிட முடியுமா, பிரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், நாட்டின் நிலைமை எப்படி மாறும், இதன் விளைவுகள் எப்படி அமையும் என்பதைப் பற்றியெல்லாம் - இந்த 'நால்வர் கூட்டணி' யோசிக்கவில்லை.

நாங்கள் - ஜனாதிபதி அம்மையாரைச் சந்தித்துப் பேசியதால், கிழக்கைப் பிரிக்கும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டதென்று, இந்த 'நால்வர்



கூட்டணி' - தங்கள் சாதனைப் பட்டியலில் இதையும் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஜனாதிபதி சந்திரிகா சொல்வதையெல்லாம் கேட்டுத் தலையாட்டுவதற்குத் தமிழர் தரப்பில் மேலும் நால்வர் கூடுதலாக இருக்கிறதென்பதால், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஒரு திருப்தி.

இதேசமயம் ஆட்சி அதிகாரத்தைக் குறிவைத்து, கூட்டுறவு பற்றிப் பேச்சு நடத்தும் மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி.க்கு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவதிலோ, அதிகாரத்தைப் பகிர்வதிலோ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதிலோ, சிறிதும் விருப்பமில்லை, நம்பிக்கையுமில்லை!

விடுதலைப் புலிகளை எப்படியும் தோற்கடிக்க வேண்டும். தமிழ்மக்களுக்கு உரிமை என்பது - தாங்கள் என்ன கொடுக்கிறார்களோ, அவற்றுடன் தமிழர் திருப்தியடைய வேண்டும் என்பதுதான் ஜே.வி.பியின் நிலைப்பாடு.

வெளிநாடுகளோ, வெளிவல்லரசுகளோ இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடக்கூடாது, சமாதான முயற்சிகளில் ஈடுபடக் கூடாது என்பது ஜே.வி.பியின் கொள்கை. ஆனால், வெளிநாடுகளிடமிருந்து ஆயுதங்கள் பெறுவதற்கு அவர்கள் ஆட்சேபிக்கவில்லை.

தமிழருக்கு இந்த நாட்டில் எந்த உரிமையும் இல்லை என்பது சிஹல உறுமயவின் கொள்கை!

சமாதானப் பேச்சுவார்த்தை பற்றியும், இடைக்கால நிர்வாக அமைப்புப் பற்றியும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அடிக்கடி வெவ்வேறு கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

சந்திரிகா அம்மையாரின் ஒரே சிந்தனை, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கவிழ்த்து, தமது சிறீலங்கா சுதந்திரக் கட்சியையோ அல்லது பொ.ஐ.முன்னணியையோ அல்லது ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து, ஒரு ஆட்சியை உருவாக்குவது என்பதுதான்!

சந்திரிகாவின் எதிர்ப்பையும், ஜே.வி.பியின் எதிர்ப்பையும், பொ.ஐ.முன்னணியின் எதிர்ப்புக்களையும் எப்படிச் சமாளித்து, தமது அரசு சாதனையை நிலைநாட்டி, இலங்கையின் 'தேசபக்த வீரர்' என்ற பெயரைப் பெறுவது என்பது, ரணில் விக்கிரமசிங்கவின் அபிலாஷை.

சந்திரிகா என்றாலும், ரணிலானாலும், வேறெந்த சிங்கள அரசியல் தலைவர்களானாலும், இலங்கையில் தமிழ்மக்கள் சுயாதீன உரிமையுடன் வாழ்வதற்கு ஆதரவளிக்கத் தயாராக இல்லை. சுயநிர்ணய உரிமை மட்டுமல்ல, சாதாரண சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமையைக்கூட, தமிழ்மக்கள் அனுபவிப்பதற்குச் சிங்கள அரசியல்வாதிகள் அனுமதிக்கத் தயாராகவில்லை.

1955-1956 ஆம் ஆண்டுகளில் சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, 24 மணிநேரத்தில் சிங்களத்தை அரியணையில் ஏற்றுவதாக, மொழிவெறியைக் கிளப்பி பிரசாரம் மேற்கொண்டபோது, சேர்ஜோன் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியினரும் போட்டி போட்டுக்கொண்டு சிங்களத்திற்கு முடி சூட்டும் மொழிவெறிப் பிரசாரத்தையே மேற்கொண்டனர். இந்தக் காலத்தில் டொக்டர் என்.எம்.பெரேரா, டொக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகிய தலைவர்களின் கீழிருந்த லங்கா சமசமாஜக் கட்சியும், டொக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன் ஆகியோர் தலைமையிலிருந்த இலங்கை கம்யூனிஸ் கட்சியும், மொழிவெறிக்கு எதிராக - இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்த்து வழங்கினாலே, இலங்கையில் ஐக்கியம் நிலவும். நாடும், முன்னேறும் என்றும் குரல் கொடுத்தனர். ஆனால், மொழிவெறியைத் தொடர்ந்து, இனவெறியை பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்ற அன்றைய சிங்களத் தலைவர்கள் வளர்த்தனர். அதன் விளைவாகத் தான் இன்று இலங்கை அனுபவிக்கிறதென்பதை, இன்று சிலர் உணர்கின்றனர். ஆனாலும், இது காலம்கடந்த ஞானமாகவே இருக்கிறது. சில தினங்களுக்குமுன் 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் வாசகர் ஒருவர், டொக்டர் என்.எம், டொக்டர் கொல்வின் ஆகியோர் பின்பற்றிய மொழிக் கொள்கையை நிராகரித்ததன் விளைவை, நாடு இன்று அனுபவிக்கின்றது என்று எழுதியிருந்தார்.

பிற்காலத்தில் டொக்டர் என்.எம்மும், டொக்டர் கொல்வின் கூட, வடக்கு - கிழக்கு தமிழர்கள், தங்களை சமசமாஜக் கட்சியை நிராகரித்து - தமிழ்க் கட்சிகளையே ஆதரித்து நின்றதால், இனவாதிகள் மாறினர் என்பதும் நினைவுகூரப்பட வேண்டும். இல்லையேல் 1970 ஆம் ஆண்டு புதிய குடியரசு அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டபோது, டொக்டர் கொல்வின் நினைத்திருந்தால், இனப்பிரச்சினையைத் தீர்த்து இருக்க முடியும். இதன் பின்னர் - ஒரு சமயம் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்குப் பேட்டியளித்த கொல்வின், இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பே சரியான தீர்வு என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், தமிழ் மக்களைப் பழிவாங்குவதற்காக 1970 ஆம் ஆண்டில் அந்த யோசனைகளை நிராகரித்தார்.

1956 ஆம் ஆண்டு தொடங்கி 1977 ஆம் ஆண்டு வரை- 1983 ஆம் ஆண்டு வரையிலும் என்று கூடச் சொல்லலாம். அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினம் இன்று இல்லை என்பதை மறந்துவிடக்கூடாது.

1956 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரை தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க, மகாத்மா காந்தி காட்டிய சாத்வீகப் போராட்டத்தையே நம்பியிருந்தனர். இந்த காந்தீயப் போராட்டத்திற்கு ஆங்கிலேயர் கொடுத்த மதிப்பைக் கூட, சிங்கள் ஆட்சியாளர்கள் கொடுக்காமல் நிராயுதப் போராட்டத்தை, ஆயுதம் பலம் கொண்டு அடக்கி ஒடுக்கியதுடன், தமிழினத்தையே அழித்தொழிப்பதில் ஈடுபட்டனர்.

ஜனநாயக முறையில் - தமது மண்ணையும், மொழியையும் தமது உரிமைகளையும் பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளில் தமிழ் மக்கள் வெற்றி பெறமுடியவில்லை.

காந்தீயவழியில் உரிமைகளைப் பெறுவதற்கு - நடத்திய சாத்வீகப் போராட்டங்களும், ஆயுதபலத்தால் அடக்கியொடுக்கப்பட்ட பின், தமிழினத்தையே சிங்களப் பெரும்பான்மை அழித்தொழிக்க முற்பட்டவேளையில்தான், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினர்.

தமிழ்மக்கள் பிரபாகரன் தலைமையில் ஆயுத பலம் பெற்று - தமது மண்ணையும், தமது உரிமைகளையும் மீட்டெடுப்பதில் வெற்றிநடை போட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் - இன்று சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, திருகோணமலைத் துறைமுகத்துக்கும், இந்தியா குத்தகைக்கு எடுத்துள்ள எண்ணெய்க் குதங்களுக்கும் ஆபத்து, திருகோணமலைத் துறைமுகம் உட்பட திருகோணமலைக்கே ஆபத்து என்று கூக்குரலிட்டு ஒப்பாரி வைக்கிறது.

திருகோணமலைக்கு ஆபத்து - இந்தியா தலையிட்டு திருகோணமலையைக் காப்பாற்ற வேண்டுமென்று, சந்திரிகாவின் தலைமையிலான கும்பல் - புதுடெல்கியின் கதவைத் தட்டி ஓலமிட்டுக்கொண்டிருக்கிறது. திருகோணமலையைத் தமிழீழத்தின் தலைநகர் என்று விடுதலைப் புலிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஓடிவாருங்கள் வந்து காப்பாற்றுங்கள் என்று புதுடெல்கியைப் பார்த்து ஓலமிடுகிறார்கள்.

தமிழ்மக்கள், தங்கள் தாயக மண்ணுக்கு உரிமை கொண்டாடக்கூடாது. ஆனால், அந்நியரான இந்தியா வந்து - திருகோணமலையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்வதில் ஆட்சேபமில்லை என்று 'தேசப்பற்று மிக்க' சந்திரிகாவும், அவரது பொதுஜன ஐக்கிய முன்னணியும் கூறுகிறது. "தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையானால் போதும்" என்ற நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி நிற்கிறது.

சந்திரிகாவினதும், பொதுஜன ஐக்கிய முன்னணியினதும்- இந்த ஒப்பாரிக்கு "தேசப்பற்றுமிக்க' ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி ஒட்டிக்கொண்டுள்ளதா? அந்நியரே இலங்கைப் பிரச்சினையில் தலையிடக்கூடாது என்று, கூறும் ஜே.வி.பி. இந்தியா - திருகோணமலையைக் காப்பாற்றுவதற்கு அழைக்கும் சந்திரிகா- கதிர்காமரின் திட்டத்துக்கு ஆதரவா? ஜே.வி.பி. பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டுச்சேரும் பேச்சு முறிந்துவிட்டது. இனி அநுரா உயிரைக் கொடுக்க முன்வருவாரா? கூட்டு முறிந்ததற்காகக் குற்றஞ்சாட்டுவாரா?

திருகோணமலை - விடுதலைப் புலிகளிடம் பறிபோகப்போகிறது. இந்தியா வந்து காப்பாற்றவேண்டும். இதற்கு முன், இந்த ஆபத்துக்கெல்லாம் காரணமான ரணில் ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும். நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய ஆட்சியைக் கொண்டுவரவேண்டும்.

இல்லையேல், நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி பயன்படுத்தவேண்டும் என்பது, சுதந்திரக் கட்சியினர் மாநாட்டில் குரலெழுப்பியிருக்கின்றனர்.

தேசப்ப்றறாவது மண்ணாங்கட்டியாவது. அதிகாரப்பற்று அளவுக்கு மீறிவிட்டது. இதற்காகவே, இந்தக் கூச்சல் இந்த நிலையில் நால்வர் கூட்டணியின் நிலை என்ன?

# தேசிய ரீதியான கூட்டு அமைக்க ஜனாதிபதி சந்திரிகாஅழைப்பு!

(கொழும்பு)

ஜே.விபிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டமைப்பு, உருவாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த நிலையில், தேசிய ரீதியான கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் இருந்து நாட்டைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பெலியந்த என்னும் இடத்தில், நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகிறபோது அவர் இவ்வாறு அழைப்பை விடுத்தார்.

நாடு அழிவுப் பாதைகளில் சென்று கொண்டு இருப்பதாகவும், அதில் இருந்து நாட்டைக்காப்பாற்றுவதற்கு - தம்மோடு ஏனைய கட்சிகளையும் இணையுமாறும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

தன்னுடைய அழைப்பை ஏற்று, தம்மோடு இணைந்து - அமைதிக்கான பங்களிப்பை செய்யுமாறும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதற்கிடையில் ஜே.வி.பியுடன் கூட்டமைப்பு முறிவடைந்த நிலையில் சுதந்திரக் கட்சிக்கு இடையே முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுவதற்கு, சுதந்திரக் கட்சியில் உள்ள சிலர் விருப்பம் தெரிவித்திருந்தனர். தற்போது அவர்கள் ஜே.வி.பியுடன் இணைய முயற்சிகள் எடுப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அவசர கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்கான - விவசாயம் சம்பந்தமான அவசர கலந்துரையாடல் ஒன்று, இன்று 3 மணிக்கு மட்டுவில் சந்திரமௌளலீச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், அனைத்து விவசாயிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ஐ.நா.செயலாளர் கோபி அனான் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம்!

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபி அனான், உத்தியோகபூர்வ விஜயமாக - அடுத்த மாதம் 9 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இருநாள் விஜயமாக இலங்கை வரும் கோபி அனான், பிரதானமாக இலங்கையில் சமாதானம், பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்வதற்கு உதவும் வகையில் அவரது விஜயம் அமைந்திருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரோடு ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த 24 அதிகாரிகளும், இலங்கைக்கு வரவுள்ளனர். அவர்கள் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு, இந்தியா பயணமாவர்கள்.

கோபி அனான், இலங்கையில் இருக்கும் காலங்களில் - ஜனாதிபதி உட்பட புத்திஜீவிகளோடும் அரச சார் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாட இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கால்நடைகளுக்கு தடுப்பு மருந்து

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கு ஏற்படும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் பணி, இன்று மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் - காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளதாக, கிராம அலுவலர் சி.கனகரத்தினம் அறிவித்துள்ளார்.அன்றைய தினம் தமது கால்நடைகளுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிப் பயன்பெறும் வண்ணம் மட்டுவில் வடக்கு, கிழக்கு சரசாலைப் பகுதி மக்களை கேட்கப்பட்டுள்ளது.

# உலக நோக்கு

## இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான பீஹாரில் நிலக்கண்ணி தாக்குதல்; பத்துப் பொலிஸார் உயிரிழந்தனர்!

(பீஹார்)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான பீஹாரில், இடம்பெற்ற நிலக்கண்ணித் தாக்குதல் ஒன்றில் குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர். உயிரிந்தவர்களில் 10 பேர் பொலிஸார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பீஹார் மாநிலத்தின் தலைநகரான பட்னாவை நோக்கி பொலிஸ் ஜீப் ஒன்று சென்றுகொண்டிருந்தபோது நிலக் கண்ணிக குள் சிக்கியதாக அறிவிக்கப்படுகிறது.

மாவோஸிட் தீவிரவாதக் குழுக்கள் பல பீஹாரில் செயற்பட்டு வருகின்றன. கடந்த 20 ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் வன்முறைகளில் இதுவரை 6000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அறியவருகிறது.

பீஹார் மிகவும் ஏழ்மையான மாநில மாகும். இங்கு ஒரு கொம்யூனிஷ் அரசை உருவாக்குவதற்காக, 'கொண்ட பலி சீதா ராமையா' தலைமையிலான போராளி அமைப்பு போராடி வருகிறது. செல்வந்த நிலச்சொந்தக்காரர்களுக்கும், அரச படையினருக்கும் எதிராகவுமே இந்த இயக்கம் போராடி வருகிறது.

## தொடரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த ஈராக்கிற்கு மேலும் 3,000 பிரிட்டிஷ் படை!

(லண்டன்)

3000 பிரிட்டிஷ் படையினரை ஈராக்கிற்கு அனுப்புவது குறித்த அறிவிப்பை, பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜோப் கூன் எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கவுள்ளார்.

ஜேமன், சைபிரஷ் ஆகிய நாடுகளில் நிலைநிறுத்தப்பட்டுள்ள பிரிட்டிஷ் படையணியிலிருந்தே அவர்கள் அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் தற்போது பத்தாயிரம் பிரிட்டிஷ் படையினர் கடமையாற்றி வருகின்றனர். ஆனால், அங்கு பாதுகாப்பு நிலைமை தொடர்ந்து சீர்குலைந்து வருகிறது. அமெரிக்க, பிரிட்டன் படையினர் மீதான தாக்குதல்கள் நாளாந்த நிகழ்வுகளாக உள்ளன என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை - போரின் பின்னரான ஈராக்கின் நிலைமை குறித்து அமெரிக்க ஜனாதிபதி புஷ், பலத்த விமர்சனங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில், சுதந்திரத்தை விரும்பாதவர்கள் கடுமையாகப் போராடுகிறார்கள். அவர்கள் தோற்கடிக்கப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

ஈராக்கிலும், ஆப்கானிலும் மீண்டும் ஜனநாயகம் நிலைநிறுத்தப்படுவதை எதிர்ப்பவர்களுக்கு எதிராகப் போராட, அமெரிக்க காங்கிரஸிடமிருந்து 87 மில்லியன் டொலர் நிதிக்கான அனுமதியைக் கேட்டிருந்த புஷ், ஈராக் மீதான போரின் பின்னர், இதுவரை 67 அமெரிக்கப் படையினரும், 11 பிரிட்டிஷ் படையினரும் 100 இற்கு மேற்பட்ட ஈராக்கியர்களும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்தார்.



### அப்பாஸுக்கு பதிலாக சட்டசபை சபாநாயகர்

(காஸா)

பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸ் பதவி விலகியதையடுத்து அந்நாட்டு சட்டசபை சபாநாயகர் அஹமட் குரெய், பலஸ்தீன - இஸ்ரேல் சமாதானப் பேச்சுக்களில் நடுநிலையாளராகச் செயற்படும் வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிகின்றது. இவர் அரபாத்தின் 'பாதா' கட்சியின் அங்கத்தவராவார். ஒஸ்லோவில் 1993 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னோடியாக இருந்தவர்.

## ஆப்கானில் பணிபுரிய நேட்டோ படைகள்!



ஆப்கானிஸ்தானுக்கு அண்மையில் விஜயம் செய்த அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட், அந்நாட்டு ஜனாதிபதி கமிட் கர்சையைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது நேட்டோ தலைமையில் இயங்கும் சர்வதேச படையை அங்கு பணியில் அமர்த்துவது தொடர்பாக அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆப்கானில், தலிபான் போராளிகளின் தாக்குதல்கள் மீண்டும் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்தே, நேட்டோ படையினரை கடமையில் ஈடுபடுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக, பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போது ரம்ஸ் பீல்ட் தெரிவித்தார்.

கடந்த 10 நாட்களில், அமெரிக்கா - ஆப்கான் படையினரால் 200 இற்கு மேற்பட்ட தலிபான் போராளிகள் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரானின் அணுசக்தி விபரங்களை கோருகிறது ஐக்கிய நாடுகள் சபை!



(நியூயோர்க்)

ஈரானின் அணுவாயுத உற்பத்தி தொடர்பான செயற்பாடுகளை, தமக்குத் தெரிவிக்குமாறு ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி அமைப்பு, அந்நாட்டைக் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அணுசக்தி அமைப்பின் தலைவர் மொஹமட் எல்பராடை கருத்து தெரிவிக்கும்போது, அனுவாயுத உற்பத்தி தொடர்பான தமது கோரிக்கைக்கு ஈரானிய அரசு ஒத்துழைப்பைக் கொடுத்தபோதும், அத்துறையில் சம்பந்தப்பட்ட அறிஞர்கள் போதிய தகவல்களை வழங்க மறுப்பதாகத் தெரிவித்தார்.

ஈரானிய அணுசாலைகளில்,அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான யுரேனியத்தின் சுவடுகள் காணப்பட்டதை பரிசோதகர்கள் தெரிவித்துள்ளதாக அணுசக்தி அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான யுரேனியத்தை பிரித்தெடுப்பதில் பரிசோதனைகள் செய்ததாக ஈரான் ஒத்துக்கொண்டுள்ளது.

இப்பரிசோதனைகள் அணு மின்சக்தியை உருவாக்குவதற்கு செய்யப்பட்டதாகவும், அமெரிக்காவிடம் இருந்து அதிக அழுத்தங்கள் கிடைத்தால் பிரச்சினைகள் எதிர்விளைவுகளை உண்டாக்கலாம் எனவும் தெரிவித்தது.

### டேவிட் கெலி விசாரணையில் புதிய திருப்பங்கள்

(லண்டன்)

ஈராக்கின் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பாக தகவல் வெளியிட்டதாகக் கூறப்பட்ட பிரிட்டிஷ் ஆயுதவிற்பன்னர் டேவிட் கெலியின் மரணம் தொடர்பான கற்றன் விசாரணையில் புதிய திருப்பங்கள் தோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் - அவரின் மரணத்துக்கு முன்னர் எழுதப்பட்ட டயரியில், பி.பி.சி. செய்தியாளர் அன்ரியூ கிலிங்கனைச சந்தித்தது தொடர்பாக விரிவா விவரிக்கப்பட்டுள்ளது.




வண்ணத்துப் பூச்சிகள்போல பிள்ளைகள் வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து வெளிக்கிளம்பிச் சென்றதாக அந்தக் காட்சியை புகழ்பெற்ற எழுத்தாளர் ஒரு சிறு கதையில் எழுதியிருந்ததாக நினைவு.

இப்போது இந்த வண்ணத்துப் பூச்சிகள் ரியூட்டரிகளிலிருந்து சைக்கிளில் பறந்து செல்வதை யாழ்ப்பாணத்து வீதிகளில் காணலாம்.

நானும், நண்பரும் இரு தினங்களுக்கு முன் கன்னாதிட்டி வீதியில் நடந்துசென்றபோது வீதியின் ஓரத்தில் சைக்கிள் வண்டிகள் நிரைக்கு அடுக்காக நிறுத்தப்பட்டிருந்தன. இந்த வீதியில் மட்டுமல்ல பல வீதிகளில் இந்தக் காட்சியை பார்க்கலாம். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் நேரத்தில் இந்தக் காட்சிகளை அதிகமாகப் பார்க்கலாம்.

இவற்றைப் பார்த்துக்கொண்டு இருவரும் நடந்து கொண்டிருந்தோம். ஏதோ யோசனையோடு நடந்து கொண்டிருந்த நண்பர் திடீரென்று நின்றார். 'எங்களுக்கு அந்தக் காலத்தில் படிப்பித்த வாத்திமார்கள் எல்லாம் முட்டாள்கள்' என்றார்.

நான் சற்று திகைத்து விட்டேன். என்றாலும் சுதாகரித்துக் கொண்டு, 'எங்களைப் படிப்பித்ததற்காகவா இப்படிச் சொல்லுகிறீர்கள்? ' என்று கேட்டேன்.

'மச்சான், உனக்குக் கணக்குப் பாடம் ஓடாது. வகுப்பில் எப்படிச் சொல்லிக் கொடுத்தாலும் ஏறேல்லை. கடைசி வரை எனக்குக் கணக்கு வரவே இல்லையே' என்றேன்.

'வைத்தியலிங்கம் மாஸ்ரர் என்ன செய்தவர். டேய், நீ காலை ஆறுமணிக்கு வீட்டுக்கு வா, நான் சொல்லித்தாறேன் என்று வீட்டுக்கு வரச்சொல்லிப் படிப்பித்தவர் அல்லவா?'

'அது மட்டுமல்ல உனக்கும் வேறு நாலைந்து பேருக்கும் ஆங்கிலம் படிப்பிக்க, சதாசிவம் மாஸ்ரர் வீட்டுக்கு வரச் சொல்லி , மாலையில் சொல்லிக் கொடுத்தவரல்லவா?

பள்ளிக் கூடத்தில் நன்றாகப் படிக்கத் தவறும் மாணவர்களுக்காக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் விசேட வகுப்பு நடத்துவார்கள். ஆசிரியர்கள் தங்கள் ஓய்வு நாளைத் தியாகம் செய்து பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள்.

இது ஒரு பள்ளிக் கூடத்தில் மட்டுமல்ல பல பள்ளிக் கூடங்களிலும் அதிபர், ஆசிரியர்கள் - மாணவர்கள் நலனில் அக்கறைகொண்டு பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். வீட்டுக்குக் கூப்பிட்டுச் சொல்லிக் கொடுக்கும்போது பிள்ளைகளுக்குத் தேநீரும் கூடக் கொடுப்பார்கள்.

ஒவ்வொரு மாணவனின் கல்வியில் மட்டுமல்ல அவனது ஒழுக்கத்திலும் நடவடிக்கையிலும் கவனமாக இருப்பார்கள்.

தவறுதலாக நடக்கும் மாணவனின் பெற்றோரைக் கூப்பிட்டும் ஆலோசனை சொல்லி அனுப்புவார்கள்.

ஒவ்வொரு மாணவ மாணவியின் குடும்பத்தைப் பற்றியும் நன்கறிந்து மாணவ மாணவியருக்கும் அவர்களது பெற்றோருக்கும் அதிபர் காலத்துக்குக் காலம் அறிவுரை கூறுவார்.

இப்பொழுதுள்ள ஆசிரியர்கள் நன்றாகப் படிக்காத மாணவ மாணவியரிடம் நீ ரியூட்டரிக்குப் போகவில்லையா என்றுதான் கேட்கிறார்கள்.

பள்ளிக் கூடத்தில் சொல்லிக்கொடுப்பதைவிட அதே ஆசிரியர் ரியூட்டரியில் நன்கு விளக்கமாகவும் விபரமாகவும் பாடம் சொல்லிக் கொடுப்பாராம். இந்தப் புத்தி அந்தக் காலத்து ஆசிரியர்மாருக்கு இருந்திருந்தால் அப்பொழுதே ரியூட்டரிகள் தோன்றியிருக்கும்!

இவற்றையெல்லாம் நாங்களிருவரும் பேசிக்கொண்டு நடந்தோம். நண்பர் போனபின் பட்டப் படிப்புப் படிக்கின்றவர்களுக்கு ஆங்கிலம் படிப்பித்த எனது நண்பரைச் சந்தித்தேன்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் அந்த நண்பருடன் ரியூட்டரிகள் பற்றி பேசியதைச்சொன்னேன்.

'ஓ.எல், ஏ.எல். பெறுபேறுகள் வெளிவந்ததும் அந்தக் கல்லூரியில் மாணவர்கள் அதிக புள்ளிகள் எடுத்தார்கள், இந்தக் கல்லூரியில்தான் ஆகக் கூடுதலான புள்ளிகள் எடுத்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடுகிறார்கள். அதிக புள்ளிகள் எடுத்த மாணவ மாணவிகள் இந்தக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் என்றெல்லாம் புகைப்படத்துடன் கூடப் பத்திரிகைகளில் வெளியிடுவார்கள். ஆனால், இப்படி வெளியிடும்போது இந்தப் பிள்ளைகள் படித்த ரியூட்டரிகளின் பெயர்களையும், ஆசிரியர்களின் பெயர்களையும் அடைப்புக் குறிக்குள் போடுவதுதான் பொருத்தமானதாக இருக்கும்' என்றார் நண்பர்.

உண்மைதான். இது ஆசிரியர்களின் கவனத்துக்கு!

வீதியோரங்களில் ரியூட்டரிகளுக்கு வெளியே சைக்கிள்களை விடும் மாணவ மாணவியர் அவசரத்தில் சில சமயங்களில் போக்குவரத்துக்கு இடையூறாகவும் நிறுத்தி விடுகிறார்கள். ஆசிரியர்கள் கவனித்தால் நல்லது!

கடந்த ஞாயிறு வெளிவந்த கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் முதல் பக்கத்தில் வெளிவந்த செய்தித் தலைப்பு இது.

'யாழ். மாவட்டத்தில் பலதரப்பட்ட பாடசாலைகளில் உயர்தர மாணவர்களின் பழக்கவழக்கங்கள் நாளுக்கு நாள் மோசமடைவதாகப் புகார' என்று தெரிவித்தது.

'யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களின் பழக்கவழக்கம் மோசமாக மாறிவருவது குறித்து கவலையடைந்துள்ள அதிபர்களும் ஆசிரியர்களும் இது பற்றி பெற்றோரை அழைத்து முறையிடுவதில் ஈடுபட்டுள்ளனர்' என்று அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

இந்த நிலைமைக்கு யார் காரணம்? எது காரணம்?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

# மணற்காடு, குடத்தனை பகுதிகளில் மண் அகழ்வினை மேற்கொள்ளலாம்

## கனியவள ஆராய்ச்சி அதிகாரி சிபார்சு

வடமராட்சி கிழக்கு, மணற்காடு, குடத்தனை பகுதிகளில் மண் அகழலாம் என - மண்ணியல் கனியவள ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் சிபார்சு செய்துள்ளனர்.

சென்ற மாதமளவில், யாழ். வந்த மண்ணியல் நிபுணர்கள் மணற்காட்டுப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு, மண் மாதிரியினை ஆய்வுக்காக கொழும்புக்கு கொண்டு சென்றனர். தற்போது இது தொடர்பாக, தமது அறிக்கையினை யாழ். அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இந்த அறிக்கையில், மேற்படி இடத்தில் - வெள்ளைமண் உள்ள இடத்தையும், இரண்டு மீற்றருக்கு மேல் மணல் அணையாக உள்ள இடத்தையும் தவிர, சகல இடங்களிலும் மண் அகழலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண் அகழும் நடவடிக்கைக்குப் பொறுப்பாக வட - கிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்தி சங்கம் சிபார்சு செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மண் அகழ்வதற்கான அனுமதிப் பத்திரத்தினை - வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், மணற்காடு சந்தியிலுள்ள உப பணி மனையில் - வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் பெறலாம். இதன்படி ஒரு டிராக்டர் மண் அகழ்வதற்கு, நூறு ரூபாவினை மேற்படி புனர்வாழ்வு அபிவிருத்தி சங்கத்திற்கு அனுமதிக்கட்டணமாக மண் அகழ்பவர்கள் வழங்க வேண்டும்.

இதன்மூலம் பெறப்படும் நிதியினை, மேற்படி பிரதேசத்தில் பாதை அமைத்தல், மரம் நடுதல் போன்ற அபிவிருத்திப் பணிக்கு செலவிடும் படியும் கூறப்பட்டுள்ளது.

இதனால், யாழ். குடாநாட்டில் நீண்டநாட்களாக நிலவிவந்த மண் தட்டுப்பாட்டுப் பிரச்சினை நீங்குவதுடன், மண் விலையும் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த காலங்களில் அனுமதியின்றி மண் அகழ்வது சட்டவிரோதமான குற்றமென தெரிவிக்கப்பட்டது. மண் தட்டுப்பாட்டினால் விலையைக் கூட்டி விற்றவர்களும் உள்ளனர்.

இதேவேளை - தடைப்பட்டிருந்த அரசாங்க கட்டடங்கள் அமைக்கும் பணி உட்பட, சகல அபிவிருத்திப் பணிகளும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

### திருமலையிலிருந்து பத்திரிகை வெளிவரவுள்ளது

திருகோணமலை - மூதூர் பிரதேசத்திலிருந்து புதிய பத்திரிகை ஒன்று வெளிவரவுள்ளது.

அடுத்த மாதமளவில் "கோணமாருதம்" எனும் பெயருடன் வெளிவரவுள்ள இந்தப் பத்திரிகை ஒரு மாதாந்த வெளியீடாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (04)

---

### நாற்சந்தி

பொதுசன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி - ஆகிய கட்சிகளுக்கிடையிலான கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வியடைந்துவிட்டது.

'அதிகாரப்பரவலாக்கலை ஆதரிக்கமுடியாது' என்று கடைசிக் கூட்டத்தில் விமல் வீரவன்ச கடுமையாகக் கூறிவிட்டே வெளியேறினாராம்.

அதிகாரப்பரவலாக்கலை விரும்பாதவர்கள் சர்வாதிகாரத்தை அங்கீகரிக்கிறார்கள் என்றே கருதமுடியும்.

கடந்த தேர்தலில் 'நிறைவேற்று அதிகார' ஜனாதிபதி ஆட்சிமுறையை எதிர்த்துப் பிரசாரம் செய்தவர்களும் இவர்கள்தானே!

இப்போது அதே 'சர்வாதிகார' ஜனாதிபதி அதிகாரப்பரவலாக்கல் பற்றி கூறும்போது எதிர்ப்பது ஏனோ?

இதுதான் சிறிலங்காவின் சனநாயக சோஷலிச பௌத்த சிங்களக் குடியரசின் அரசியல் பாரம்பரியமோ....?

"யாரறிவார் பராபரமே?!"

-தெருவாசி

---

## மன்னார் அரச அதிபரிடம் வெகுஜன ஒன்றியம் மகஜர்

மன்னார் ஊடாக, புத்தளம் கொழும்பு பாதையினை மீளத்திறப்பதற்கு அநுராதபுரம் மாவட்ட அரச அதிபர் மேற்கொண்டுவரும் முயற்சியினைக் கண்டித்து, மன்னார் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர் ஒன்றினை மன்னார் மாவட்ட அரசஅதிபரிடம் நேற்று கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாதையினை திறப்பதன் மூலம், பாதையின் அருகிலுள்ள காணிகளில் சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவதற்கு அநுராதபுர அரசஅதிபர் முயற்சி எடுப்பதனை எதிர்த்தே, இந்த மகஜரினை மன்னார் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் தலைவர் ஆர்.சீவரத்தினம் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

---

சர்வதேச ஊடகதினத்தை முன்னிட்டு

## ஊடகக் கொள்கையை ஆட்சேபித்து லேக் ஹவுஸ் முன்பாக ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் ஊடகக் கொள்கையினை ஆட்சேபித்து - பல ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

கோட்டைப் புகையிரத நிலையம் லேக் ஹவுஸ் நிலையத்திற்கு முன்பாக இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஆபாசச் செய்திகளை வெளியிடுவது ஒழுக்கங்களையும் நெறிகளையும் சீர்குலைப்பது, ஊடக விமர்சனங்களைப் பாதுகாப்பது, துரோகம் இழைக்கும் செய்திகளை வெளியிடுவது தற் போதைய ஊடகங்களின் செயல் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷ மெழுப்பினார்கள்.

நேற்று நடைபெற்ற சர்வதேச ஊடக தினத்தை முன்னிட்டு இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஹட்சன் சமரசிங்க, லூசியன் கருணாநாயக்க, அலவி மௌலானா, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமால் சிறிபால டி சில்வா, ரிலான் பெரேரா ஆகியோர் பங்குபற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

---

### யுவதிகளிடம் சேஷ்டை ....

பாடு செய்திருந்தனர்.

இது தொடர் பான விசாரணைகளின்போதே - கோவில் வீதிப்பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களும் யுவதிகளிடமும், அவர்களது பெற்றோரிடமும் மன்னிப்புக் கோரினர்.

இதன்பின்னர் - இரு இளைஞர்களும் பொலிஸாரால் கடும் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட இளைஞர்களுள் ஒருவர் ஏற்கனவே இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் கோவில் வீதிப்பகுதியில் பெண்களுடன் சேஷ்டை விடும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

---

### கிழக்கு நிலைவரம்....

வரம், பாதுகாப்புத் தொடர்பான பிரதமரது நேற்றைய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதாகவும், இது தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டதாகவும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியன, கிழக்கு மாகாண நிலைமை தொடர்பாக விரிவாக ஆராய்ந்த பின்னர், மீண்டும் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தப் பொது இணக்கப்பாடு கண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

மற்றும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, அமைச்சர் மொறகொட ஆகியோரும் பங்குபற்றினர்.

---

### புலிகளின் தளபதி...

களின் விடயம் சம்பந்தமாக தாம் புரிந்துணர்வுடன் செயற்படுவதாக கேணல் கருணா நோர்வே தூதுவரிடம் தெரிவித்தார்.

இதேவேளை மட்டகளப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக நோர்வேத் தூதுவர் மட்டக்களப்பு மாவட்ட அதிபர் மோன குருசாமி, மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி லைலாபட்டா, ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளர் பரணிதரன் ஆகியோரை அவர்களது அலுவலகங்களில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

---

### பிரதமர் ரணில் மலேசியா பயணம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றிரவு மலேசியாவுக்கு பயணமானார்.

இரண்டு தினங்கள் அங்கு தங்கியிருக்கும் பிரதமர் - இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பல்வேறு ஒப்பந்தங்களை மலேசிய அரசாங்கத்துடன் கைச்சாத்திடுவார்.

### நாயாற்றுவெளியில் வெடிபொருள் அழிப்பு!

வன்னிப் பிரதேசத்தில் மீட்கப்பட்ட சுமார் 5000 வெடிபொருட்கள் இன்று அழிக்கப்படவுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் பெரியமடு, அடம்பன், ஈச்சிலம்பற்றை, பாப்பாமோட்டை, பரப்புக்கடந்தான் பகுதிகளில் மீட்கப்பட்ட அபாயகரமான வெடிபொருட்களே விடத்தல்தீவில் இருக்கின்ற நாயாற்று வெளியில் இன்றுகாலை - வெடிக்க வைத்து அழிக்கப்படவிருப்பதாக சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்தனர்.

---

### தமிழீழ...

டிய தலைவர், கல்வியும் - விளையாட்டும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்கப்படமுடியாதவை என்றும் தெரிவித்தார்.

இந்த வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த மாலினி மகாலிங்கம் - கடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்றிருந்தார். இதேபோன்று யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி நிசாந்தி இராஜரட்ணம் ஏ, இரண்டு பி சித்திகளைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (108)

---

### செல்வச்சந்தி.......

முருகப் பெருமானின் தேர்த்திருவிழா உற்சவத்திற்கு பெருமளவிலான பக்தர்கள் யாழ். குடாநாட்டிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் திரளவுள்ளனர். நேற்று மாலை முதலே பெருமளவு பக்தர்கள் ஆலயத்தில் கூடியுள்ளனர்

பக்தர்களின் போக்குவரத்து வசதி கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபை தனது பஸ்சேவைகளை அதிகரித்துள்ளது.

---

### முகமாலையில்...

என்பவரே தற்கொலை செய்தவராவார்.

இந்த இராணுவச் சிப்பாயின் மரண விசாரணையை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அ.பிறேம்சங்கர், இறந்தவரின் சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனையயின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202)

---



தேசியத் தலைவர் பிரபாகரனிடமிருந்து தமிழீழ வலைப்பந்தாட்ட அணியைச் சேர்ந்த வீராங்கனை சான்றிதழ் பெறுவதனைப் படத்தில் காணலாம்.

---

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினால்

## மட்டுவில் வடக்கில் புதியபாதை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் முசுறு வாய்க்கால் கரையோரமாக, புதிய பாதையொன்று அமைக்கப்பட்டுவருகிறது.

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுவரும் இந்தப்பாதை- கைதடி நுணாவில் வைரவர் கோயிலடியில் இருந்து மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயில் வரை செல்லும் 4.5 கிலோ மீற்றர் நீளமான வீதியில், பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் ஆரம்பிக்கும் இப்பாதை, வண்ணாத்திப் பாலத்தின் பின்புறமாகச் சத்திரங்கிராய் வெளிவரை 2 கிலோ மீற்றர் நீளத்திற்கு அமைக்கப்படுகிறது.

தென்மராட்சியில் மீட்கப்படும் வெடி பொருட்களை செயலிழக்கச் செய்வதற்கு சத்திரங்கிராய்க்கு அவற்றை எடுத்துச் செல்வதற்கு வசதியாகவே இந்தப்பாதை கனரக வாகனங்கள் மூலம் விரைவாக அமைக்கப்பட்டு வருவதாக ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இப்பாதை அமைப்பதற்கு மக்கள் தமது காணிகளை மனமுவந்து வழங்கியுள்ளனர். இதுவரை காலமும் கழிவு நீர் வாய்க்கால் ஊடாகப் பயணம் செய்த மக்கள் மாரிகாலத்தில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (24)

---

ரெலிகொம் நிறுவனத்தினால்

## கிளிநொச்சி மாவட்டத்திற்கு 500 தொலைபேசி இணைப்புகள்

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையமூடாக - ஐநூறு தொலைபேசி இணைப்புக்களை ஒரு மாத காலத்துக்குள் வழங்குவதற்கு இலங்கை ரெலிகொம் நிறுவனம் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, தற்போது கிளிநொச்சியில் பாவனையிலுள்ள அறுபது மோட்டறோலா இணைப்புக்களை முல்லைத்தீவுக்கு மாற்றுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்படுகிறது.

யுத்த நடவடிக்கையினால் தடைப்பட்டிருந்த வன்னிக்கான தொலைத் தொடர்பு சேவை, புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் மீளவும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.